அரசு ஊழியர்

ஜூலை 2018

மலர் : 39 இதழ் : 7

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடாக ஒரு கோப்பை சூப்

# வலி உணர்தல்

வலியை உணர மறந்துவிட்டால் அல்லது அந்த உணர்வை இழந்துவிட்டால் அது ஆபத்து மட்டுமல்ல... அழிவும்தான். சமூகத்தின் வலியை சமூகம் இழந்துவிடாமல் இருக்கவும், அந்த வலியின் காரணங்களைக் கண்டறிந்து அதனை துடைத்து எறியாமல் வளர்ச்சி என்பது வெறும் கட்டுக்கதைதான். வலியை உணர்த்துவதற்கே இன்று பயிற்சி தேவைப்படுகிறது.

- சே குவேரா

# "வரலாற்றுச் சிறப்புமிக்க ஜூலை மாதம்"

***2003*** *ஜூலை மாதம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வரலாற்றில் மறக்க முடியாத மாதம். 2003ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் ஓய்வூதியம் அனைத்தையும் பறிக்கம் வகையில் ஐந்து அரசாணைகள் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் வெளியிடப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், இளைஞர்களின் வேலை வாய்ப்பை தட்டிப் பறிக்கும் வேலை நியமன தடைச்சட்டமும் இயற்றப்பட்டது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பணியிடங்களை குறைப்பதற்காக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சுவாமிநாதன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.*

*இதனையெல்லாம் எதிர்த்து கிளர்ந்தெழுந்தது அரசு ஊழியர் சங்கம். இத்தகை கொடூர முடிவினை எதிர்த்து 2002-ல் பத்து நாட்கள் தீபாவளிக்கு முன்பு வேலை நிறுத்தம் செய்தது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தலைவர்களும், ஊழியர்களும் கைது செய்யப்பட்டு தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர். ஆனாலும், அரசு ஊழியர் சங்கம் அச்சப்படவில்லை.*

*இதனை எதிர்த்த அனைத்தை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இணைந்து 2003-ல் ஜாக்டோ-ஜியோ பேரமைப்பை உருவாக்கி 2003 ஜூலை மாதம் 2ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவித்தது. தலைமைச் செயலக சங்கம் ஜூலை 1ஆம் தேதியே வேலை நிறுத்தத்தில் பங்கேற்றது.*

*இதனை தாங்கிக் கொள்ள முடியாத அரசு ஊழியர் சங்கத் தலைவர்களை இரவோடு இரவாக கைது செய்தது. இச்செய்தி காட்டுத் தீயாக பரவியது. வேலை நிறுத்தம் தீவிரமானது. அரசு அடக்கு முறையை கட்டவிழ்த்துவிட்டு, பெண்கள் என்றம் பாராமல், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை கைது செய்து சிறையில் அடைத்தது. பெண்கள் மீது பாலியல் வழக்குகள் போடப்பட்டன. இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்று தமிழக அரசு திணறியது. வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட ஊழியர்களை எந்தவித முன்னறிவிப்புமின்றி எவ்வித விளக்கமும் கேட்காமல் பணிநீக்கம் செய்தது.*

*இந்நிலையில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் வேலை நிறுத்தம் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை சென்றது. 6072 பேரை குற்றவாளிகள் என்று*

உச்ச நீதிமன்றம் அறிவித்து, ஏனையோரை பணிக்கு செல்ல அனுமதித்தது. 6072 பேரை மூன்று நீதிபதிகள் விசாரணைக்கு உட்படுத்தியது. இந்த காலகட்டத்தில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் 6072 பேரும் 6 மாதம் வேலையின்றி இருந்தனர். மூன்று நீதிபதிகள் 999 பேரை தீவிரவாதிகள் என்று தண்டனை வழங்கி எஞ்சியோருக்கு மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வு பிடித்தம் செய்து உத்தரவிட்டு, வேலை வழங்க உத்தரவிட்டது.

அடக்குமுறைக்கு அஞ்சாத அரசு ஊழியர் சங்கத்தின் இடைவிடாத போராட்டத்தின் விளைவாக 999 பேரைத் தவிர அனைவரும் பணியில் சேர்க்கப்பட்டனர். 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. அரசு ஊழியர் சங்கம் இத்தகைய அடக்குமுறையையும் மீறி "பகை முடிக்கும் பணி முடிப்போம்" என்ற முழக்கத்துடன் மக்ககளையும், தேர்தலையும் சந்தித்தது.

2003 போராட்டத்தின்போது அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு எதிராக தாக்குதல் தொடுத்த அரசுக்கு எதிராக வாக்களிக்க அரசு ஊழியர் சங்கம் அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஜனநாயக உரிமைக்கு எதிராக நடந்து கொண்ட அன்றைய அதிமுக அரசு 39 பாராளுமன்றத் தொகுதிகளையும் பறிகொடுத்தது. இதில் பாடம் கற்றுக்கொண்ட தமிழக அரசு 999 பேரை பணியில் சேர ஆணையிட்டது. ஐந்து அரசாணைகளும் ரத்து செய்யப்பட்டன. 50% அகவிலைப்படி ஊதியத்துடன் சேர்த்து வழங்க அரசு ஆணையிட்டது. இதன் விளைவாக 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அதிமுக அரசு தோல்வியை சந்தித்தது. 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த திமுக அரசு வேலை நியமனத் தடைச் சட்டத்தினை திரும்பப் பெற்றது. பல்லாயிரக்கணக்கில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வேலைக்கு வரும் வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ.

இந்தப் போராட்டத்தில் அரசின் அடக்குமுறையால் 100-க்கும் மேற்பட்டவர்களை நாம் இழந்தோம் என்பதை மறக்க முடியாது. அந்த வீரம் செறிந்த தியாக உரிமைகளை நினைவு கூறுவதுதான் ஜூலை வேலை நிறுத்தம். அந்தக் காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்கியது அரசு ஊழியர் சங்கம்.

வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்றும், சங்கங்கள் இதனை நடத்த முடியாது என்று கொக்கரித்த ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு மத்தியில் அரசு ஊழியர் சங்கம் பீனிக்ஸ் பறவை போல், மீண்டும் மீண்டும் தனது இடைவிடாத போராட்டங்களை நடத்தி, ஜூலை 2ஆம் தேதியை எழுச்சி நாளாக கடைபிடித்த தைரியம் அரசு ஊழியர் சங்கத்தைத் தவிர வேறு யாருக்கும் வராது.

வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ள இயலாது என்று சொல்லிக் கொண்டிருந்த காலகட்டத்தில் 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசு ஊழியர் சங்கம் புதிய பென்சனை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அதே அடக்கு முதல்வரான ஜெயலலிதா அவர்கள் இருந்த தருணத்தில் தன்னந்தனியாக மீண்டும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை நடத்தியது.

2003-ல் தனது ஆக்ரோஷமான அடக்குமுறையை கைவிட்டு, அரசு ஊழியர் சங்கம் எடுத்த காத்திருப்புப் போராட்டம், தொடர் மறியல் போராட்டங்களை தாங்கிக் கொள்ள முடியாத முதலமைச்சர் ஜெயலலிதா எந்தவித அடக்குமுறையையும் மேற்கொள்ளாமல் 2003-ல் "பகை முடிக்கும் பணி முடிப்போம்" பாடத்தை மனதில் வைத்து 11 அரசாணைகளை சட்டப் பேரவையில் அறிவிக்க வைத்தது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மறக்க முடியாத முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்கள். ஆனால், அந்த முதல்வர் ஜெயலலிதா அவர்களே மறக்க முடியாத சங்கம்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். இந்த நிகழ்வுகளுக்கு காரணம் நமது ஜூலை 2003 போராட்டமும், அந்தப் போராட்டத்தை தொடங்கியதிலிருந்து முடிந்தது வரை அளப்பரிய பங்காற்றியது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் என்பதை அரசு ஊழியர்கள் மட்டுமல்லாமல், ஆசிரியர்களும் மறக்க மாட்டார்கள்.

2003 ஜூலை மாதத்தை நினைவு கூறும் அதே நேரத்தில் நமது வாழ்வாதார உரிமையான பழைய ஓய்வூதியத்தை பெற்றிடவும், சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் கிடைத்திடவும், இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் ஆதிசேஷய்யா குழுவினை களைந்திடவும், மக்களுக்கான உரிமைகளை பெற்றிடவும், நாமும், ஜாக்டோ-ஜியோவும் இணைந்து பழைய வரலாற்று நினைவுகளை மனதில் சுமந்து கொண்டு நம்பிக்கையோடு, அரசின் எத்தகைய அடக்குமுறையையும் எதிர்கொள்ளும் துணிச்சலோடு "மறக்க முடியாத" அதே ஜூலை மாதம் 21, 22 தேதிகளில் மதுரையில் நடைபெறவுள்ள மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் கோரிக்கைகளை வென்றெடுக்க வீரியமிக்க போராட்டக் களத்தை திட்டமிட தயாராவோம். ❖

# டிஜிட்டல் மயம் என்ற பெயரில் ஒழிக்கப் பார்க்கப்படும் நிரந்தர அரசுப் பணியிடங்கள்

## முதலுக்கே மோசம் வருமுன் தோழா, விழி முன், எழு முன்!



**2017** அக்டோபர் மாதத்தில் ஊதிய மாற்றம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் (செய்தி வெளியீடு எண்.678 நாள் 11.10.2017) அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந்துரைகளை அளித்திட "பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்போதே நாம் இந்த அறிவிப்பு அரசுப் பணிகளை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட தொங்கவிடப்பட்டுள்ள கத்தி என்றும், இதனால் மக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவித்து, மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு இந்த ஏற்பாட்டை தவிர்க்க வேண்டும் என்றும் நாம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

நாம் சொன்னபடியே அரசு அரசாணை எண்.56 மூலமாக ஆதிஷேசய்யா கமிட்டி அமைக்கப்பட்டது. அப்போதும் நாம் அந்த கமிட்டியை எதிர்த்தோம். ஆனால் அரசாங்கம், தற்போது அரசு அலுவலகங்களில் இருக்கின்ற பணியிடங்களை ஒழித்துக் கட்டிவிடும் பணியை உறுதியாகவும், விரைவாகவும் மேற்கொண்டுள்ளது.

இதன் நீட்சியாக தமிழக அரசு 26.06.2018ஆம் தேதி செய்தி வெளியீட்டு எண்.409 மூலம் "ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித மேலாண்மைத் திட்டம்" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. இதன்படி தற்போது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணுவழி ஓய்வூதியம் நிதி மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மை ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, மாநில அரசு நிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனித வள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணுவழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, அரசு ரூ.288.91 கோடி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்கியுள்ளது.

***திருவாளர் அக்சென்சர் சர்வீசஸ் பி.லிட்., இத்திட்டத்தின் ஆலோசனை முகமையாக நியமிக்கப்பட்டனர். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மூன்றாம் நபர் தணிக்கை முகமையாக திருவாளர் பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாக திருவாளர் விப்ரோ லிட்., நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.*** இத்திட்டத்தினைச் செயல்படுத்தக்கூடிய அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளும், மென்பொருள் உருவாக்கும் பணிகளும் தற்சமயம் முடிவுற்றுள்ளன. ***இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது பல்வேறு துறை பணியாளர்கள்/சம்பள கணக்கு அலுவலகம்/மாவட்ட கருவூலம்/சார் கருவூலத்திற்கு பட்டியல் சமர்ப்பிக்க நேரடியாக செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது.*** இத்திட்டத்தில் மாநில கணக்காயர், பாரத ரிசர்வ் வங்கி, முகமை வங்கிகள், பொது கணக்கு கட்டுப்பாட்டாளர் ஆகிய பங்குதாரர்கள் ஒருங்கிணைக்கப்படுவர்.




இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 29,000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (Drawing and Disbursing Officers) நேரடி இணையத்தின் மூலம் சம்பளப் பட்டியல் மற்றும் இதர பட்டியல்களை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். மேலும், இத்திட்டத்தில்அரசின் வருவாயினை இணையவழி மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளதால்

அரசின் நிகழ் நேர வரவினை உடனுக்குடன் அறிய இயலும். நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் எண்ம ஒப்பம் (Digital signature) மற்றும் விரல் ரேகைப் பதிவு முறை (Biometric) மூலம் உறுதிப்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்குக் கிடைப்பதுடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மை நிர்வாகம் சிறப்பாக நடைபெற வழிவகுக்கும். தேவையற்ற கால தாமதமும் முறைகேடுகளும் தவிர்க்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 9 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப் பட்டியல், உதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். இப்பணியினை அக்டோபர் 2018-க்குள் முடித்திட எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் அக்டோபர் 2018-ல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அரசுப் பணியில் சேர்ந்தது முதல் ஓய்வு பெறும் வரை உள்ள அரசுப் பணியாளர்களின் பணி வரலாறானது முழுமையாக இத்திட்டத்தின் மூலம் கணினிமயமாகிறது.

இதன்மூலம் பணிப்பதிவேடுகளைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுபட்டு அலுவலர்கள் தங்களது துறையின் ஆக்கப்பூர்வப் பணிகளில் ஈடுபட முடியும். இதனால் பல்வேறு அலுவலகங்களுக்கு இடையேயும் வெவ்வேறு ஊர்களுக்கு இடையில் பணிப்பதிவேடுகள் மாற்றப்படுவதால் ஏற்படும் காலவிரயம் குறைவதோடு, பணிப்பதிவேடு காணாமல் போகக்கூடிய சூழ்நிலையும் முடிவுக்கு வரும். பணிப்பதிவேடுகள் அவ்வப்போது கணினி மூலம் ஆய்வு செய்யப்படுவதால் நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு ஓய்வூதியம் தாமதமின்றி வழங்கப்படும். பணியாளர் தொடர்பான அரசின் ஆய்வுக்கும் திட்டமிடலுக்கும் இக்கணினி ஆவணங்கள் உதவும். ஆதாரப்பூர்வமான பணி விபரங்கள் கணினியில் இருப்பதினால் பணிமாற்ற முடிவுகள் தாமதமின்றி முறையாக எடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சம்பள கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்)-ல் உள்ள 5393 எண்ணிக்கையிலான அரசு ஊழியர்களின் பணிப்பதிவேடுகள் கணினிமயமாக்கப்படும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த, நான்கு நாட்கள் பயிற்சி சில பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும், கூடுதலாக இரண்டு நாட்கள் பயிற்சி கருவூல அலுவலர்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் கீழ், சம்பளம் மற்றும் சம்பளம் சாரா பட்டியல்கள் தயாரித்தல், மின் பணிப்பதிவேடு பராமரித்தல், ஓய்வூதிய கருத்துருக்கள் தயாரித்தல் மற்றும் இதர இனங்கள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மேலும் பட்டியல் கடவு செய்தல், காப்பறை செயல்பாடுகள், மின் அலுவலகம் மற்றும் இதர இனங்கள் குறித்து கருவூலத் துதறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2. சம்பளம்

மேலும், கடந்த 2017-2018ஆம் நிதியாண்டில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) சென்னையில் அரசு ஊழியர்களுக்ககான ஊதிய செலவினமாக ரூ.8905.45 கோடி சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அரசின் வரவினமாக இந்நிதியாண்டில் மட்டும் 638.09 கோடி அரசுக் கணக்கில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) வழியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்கு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள மனித வள மேலாண்மைத் திட்டம் என்பதன் பொருள் ஊழியர் பணியிடங்களை காலியாக்கி முற்றாக ஒழித்துக்கட்டி அதை தனியார்வசம் ஒப்படைத்து விடுவதாகும். மக்களுக்கு நல்லது செய்வதாக கூறிக்கொண்டு பல மக்கள்நலன் சார்ந்த திட்டங்களை நிறுத்தி விடுவது என்பது மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக... அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளும் அரசின் முடிவுகளும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத்தினருக்கும், அரசியல் வாதிகளுக்கும், ‘‘மக்கள் நலன்‘‘ என்ற வார்த்தையின் உள்ளார்ந்த அர்த்தம் புரியவில்லை என்பதைவிட புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைப்பதுதான் இதன் பொருள். இத்தகைய அரசாணைகளும் உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போல் தற்போது அரசு அலுவலகங்கள் இல்லை. புதிய பொருளாதார திட்டம் என்ற திட்டம் எல்லா மக்களும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ சித்தாந்தத்தை சுக்குநூறாக்கி யார் எப்படி போனால் என்ன, மக்களின் சுமைகளையும் நலன்களையும் அரசு ஏற்கக்கூடாது என்கிற வேதாந்தத்தை விதைத்தது. அதுதான் கொஞ்ச கொஞ்சமாக செயல் வடிவம் பெற்று மக்கள் நலன் பொதுசேவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்டுவிடும் அரக்கனாக உருமாறியிருக்கிறது. ஒரு சில அமைப்புகள் மட்டும் இதை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கின்றன. தொலைதூரப் பார்வையில் பார்க்கும்போது இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டேயிருந்தால், மக்கள் நலனும், உதவும் உள்ளமும், சேவை மனப்பான்மையும் முற்றிலுமாக ஒழிந்து, நாடு முழுவதும் காட்டுமிராண்டித்தனமே நிறைந்து நிற்கும்.

எந்தஒரு அரசு அலுவலகத்திற்குச் சென்றாலும் அங்கு பல இருக்கைகள் காலியாகவே காணக்கிடப்பது கண்கூடே. ஓய்வுபெற்றுச் சென்றவர்கள், பணியிட மாற்றம் சென்றவர்களின் இடங்கள் அப்படியே விடப்பட்டிருப்பதும் இன்றுவரை தொடர்கிறது. இது ஆண்டுதோறும் அதிகரித்து அதிகரித்து தற்போது பெரும்பாலானஅரசு அலுவலகங்களில் மூன்று அல்லது நான்கு அரசு ஊழியர்களின் வேலையை ஒரு ஊழியரே பார்க்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. எல்லா துறைச் சங்கங்களிலிருந்தும் எழும் கோரிக்கைகளில் நிரந்தர இடம் பிடித்துவிட்ட கோரிக்கையாக காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது தற்போது கோரிக்கையாக இல்லாமல் ஓலமாக மாறியுள்ளது. 2001 முதல் 2005 வரை அரசுத் துறைகளில், ஆசிரியர் பணியிடங்களில் எந்த ஊழியரும் சேரமுடியாத வகையில் பணி நியமனத் தடைச் சட்டம் அரசுப் பணிகளை முடக்கி விட்டது. மக்கள் சேவை செய்யக்கூடிய அரசு அதிகாரிகள் இல்லாமல் மக்கள் நலத்திட்டங்கள் எப்படி அவர்களுக்குப் போய்ச் சேரும்? ஊழியர்களை நியமிக்காமல் அரசு காலியான பணியிடங்களை நிரப்பாமல் விட்டதன் மூலம் அரசு ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்கிற பழியை அரசு ஊழியர்கள் மீது மக்களுக்கு இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. போதுமான ஊழியர்கள் இல்லாமல் அரசின் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றமுடியாமல் அனைத்து துறைகளில் ஊழியர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஆக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவின் நோக்கம் எந்தெந்தப் பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கலாம் என்பதை விட எந்தெந்தப் பணிகளை மட்டும் அரசின் வசம் விட்டுவைக்கலாம் என்பதானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அரசுப் பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும், ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப் பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, தனியார் வசம் அவற்றை ஒப்படைப்பதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை.

கருவூலக் கணக்குத் துறையை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலமாக இனி அரசு ஊழியர்களின் பணிப் பதிவேடுகள் பொது ஆவணமாக மாற்றப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு அரசு ஊழியரின் தனிப்பட்ட அடிப்படை உரிமை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. சம்பள பட்டியல்களை, வருகைப் பதிவேடுகளை மின்னணு தொழில் நுட்பத்திற்குள் கொண்டு சேர்க்குமுன் அதற்கு உண்டான அடிப்படை கட்டமைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் அதை இவ்வரசு செய்யவில்லை. டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அரசு ஊழியர்களுக்கு கற்றுக்கொடுக்காமல் அதை அப்படியே ஒப்பந்த முறையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுக்கும் ஏற்பாடானது, இனிமேல் இந்தப் பணியிடங்கள் நீக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிகுறியாகும். ஏற்கெனவே ஆதார் விவகாரத்தில் தனிமனித உரிமைகளை பாதிக்கும் வகையில் உள்ளதாக உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டியள்ள நிலையில் கருவூலக் கணக்குத் துறையில் இப்போது கொண்டுவரக்கூடிய மாற்றம் என்பது அரசு இயந்திரத்தை தனியார் வசம் ஒப்படைக்கும் ஏற்பாடாகும்.

நாம் ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு பணி செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும் என்று போராடி வரும் நிலையில் இதுபோன்ற செயல்கள் அரசு நிரந்தரப் பணியிடங்களையே இல்லாமல் செய்துவிடும் என்பது நமக்கு அடிக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை மணியாகும். தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழக மாணவர்கள் இளைஞர்களின் நலன்களும் வேலைவாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் வேலைவாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும். அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்கும் போக்கின் மூலம் மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகிவிடும் என்றும் மீண்டும் தெரிவிக்க விரும்புகிறோம். எனவே, கருவூலக் கணக்குத் துறையை தனியார் நிறுவனங்களுக்கு தாரை வார்த்துள்ளதை திரும்பப் பெற வேண்டும் என்றும், இந்தப் போக்கு தொடருமானால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பெருந்திரளான ஊழியர்களைத் திரட்டி போராட்டக் களம் காண நேரிடும்.

❖

# போராட்டங்களும் பெண் அரசு ஊழியர்களின் பங்கும்

“பெண்கள் பங்கேற்காத எந்தப் போராட்டமும் முழு அளவில் வெற்றி பெற்றதாக வரலாறுகள் இல்லை”. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரையில் உதயமான 6.5.1984-க்கு பின் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் அறிவித்தபோது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அறைகூவலை ஏற்று 1988ஆம் ஆண்டு ஜுன் 22 முதல் நடந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பெண் அரசு ஊழியர்கள் பிரமிப்பூட்டும் வகையில் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கில் தமிழ்நாடெங்கும் மறியலில் ஈடுபட்டனர். குதிரைப்படைகளை எதிர்கொண்டு அஞ்சாமல் போராட்டத்தில் பங்கு பெற்றனர். சிறை சென்றனர். இதற்கு முன்னோடியாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் முதல் கல்லூரி பேராசிரியர்கள் வரை ஒன்றிணைந்து “ஜாக்டீ” என்ற அமைப்பின்கீழ் 1985-ல் நடத்திய போராட்டம் “ஜாக்டீ பேரியக்கமாக” உருவாக உதவியதில் பெண் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர் பெண்களுக்கும் பெரும் பங்கு உண்டு. நகல் எரிக்கும் போராட்டத்தில் பெண் ஆசிரியர்கள் முன்னணி பாத்திரம் வகித்தனர். சிறை நிரப்பிய 10,000க்கும் மேற்பட்ட பெண் ஆசிரியர்களில் நிறைமாத கர்ப்பிணிகளும் மன உறுதியோடு சிறைவாசத்தை அனுபவித்தனர். திருமண தேதியையும் சிறைக்குள் இலட்சியத்தோடு கழித்தனர். பல்லாயிரக்கணக்கில் பெண் ஆசிரியைகள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உண்ணாவிரதம் என பலகட்ட போராட்டங்களில் மட்டுமல்லாது, தமிழகத்தின் சிறைச்சாலைகளையும் நிரப்பினர் என்பது பெண் ஊழியர்களின் இயக்க வரலாற்றில் ஒரு மைல்கல் எனலாம். இத்தகைய போராட்டங்களுடைய வெற்றி பெண் ஊழியர்களின் மனதில் இருந்த அச்ச உணர்வை ஓரளவுக்கு அகற்றியது. அதிகாரிகளுக்கும், அரசாங்கத்திற்கும் மரியாதை தருவோம். ஆனால், அஞ்ச மாட்டோம் என்ற தன்னம்பிக்கை இப்போராட்டம் நமக்கு அனுபவத்தை கொடுத்தது.

இதே உறுதி 1991 முதல் 1996 முடிய அரசு ஊழியர் இயக்க வரலாற்றில் நடைபெற்ற பொருளாதார கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் வெளிப்பட்டது. அதற்கும் மேலாக இந்திய நாட்டின் இறையாண்மையை காக்கவும், புதிய பொருளாதாரக் கொள்கையை கண்டித்தும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அறைகூவலை ஏற்று பல முறை ஒருநாள் வேலை நிறுத்தங்களில் அதிகளவில் பெண் ஊழியர்கள் கலந்து கொண்டுள்ளனர். இப்போராட்டங்களின் மூலம் அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வென்றிடவும், பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லவும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் இணைப்பு பெண் ஊழியர்களிடத்தில் விஸ்தரித்தது என்று கூறினால் அது மிகையாகாது.

இதே காலகட்டத்தில் இந்திய அரசாங்கம் கடைபிடித்துவரும் புதிய பொருளாதாரக் கொள்கையினால் அரசு ஊழியர்கள் ஏற்கனவே மறுக்கப்பட்டு வரும் ஈட்டிய விடுப்பு, ஊதிய மாற்றம், போனஸ் உள்ளிட்ட சலுகைகளை இழக்க வேண்டி வரும் சூழல் உள்ளதை தமிழகமெங்கும் அனைத்து அலுவலகங்களிலும் ஊழியர்களை சந்தித்து பிரச்சாரம் செய்யும்போது, இதன் பாதிப்பின் தன்மைகளை பெண் ஊழியர்கள் உணர ஆரம்பித்து போராட்ட இயக்கங்களில் தங்களது பங்கேற்பை தொடர்ச்சியாக உறுதி செய்த நிகழ்வுகளும், நமது ஸ்தாபனத்தின் ஒரு மைல் கல்லே.

2002-ல் ஆட்சியில் இருந்த ஜெயலலிதா அரசு, போராடி பெற்ற சலுகைகளை பறித்தபோது, அரசு ஊழியர் சங்கத்தின் அறைகூவலை ஏற்று தொடர்ச்சியான போராட்டங்களில் பங்கேற்று 2003-ல் வரலாற்றுச் சிறப்புமிக்க வேலை நிறுத்தத்தில் அதிகளவில் பெண்கள் பங்கேற்றனர். ஊதிய பிடித்தம், ஒழுங்கு நடவடிக்கை என 1,70,000 ஊழியர்கள் டிஸ்மிஸ் நடவடிக்கை, பாலியல் வழக்கில் பெண் ஊழியர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலும், அரசு குடியிருப்புகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட நிலையிலும், எஸ்மா, டெஸ்மா சூழ்நிலையிலும் பலத்த அச்சுறுத்தல்கள் இருந்தாலும், அதனை பொருட்படுத்தாமல் ஸ்தாபனத்தின் மீது நம்பிக்கை வைத்து பெண்கள் தீரமுடன் பங்கேற்று வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கினர்.

2004-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தங்களை பாலியல் வழக்கில் கைது செய்வதாக அச்சுறுத்திய தமிழக அரசு “பகை முடிக்கும் பணியினை” நெஞ்சில் இருத்தி தேர்தல் வாக்குச்சாவடியிலும், தபால் ஓட்டுகளிலும் பூஜ்ஜியத்தை கொடுத்து வைராக்கியத்தை தீர்த்துக் கொண்டதில் பெண் ஆசிரியர், அரசு ஊழியர்களின் பணி மகத்தானது.

ஜீரோ பட்ஜெட் கருத்தரங்கம், தீண்டாமை

ஒழிப்பு கருத்தரங்கம், மக்களை நோக்கிய பயணம், விலைவாசி உயர்வுக்கு எதிராக, பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு எதிராக, புயல், வெள்ள நிவாரணப் பணிகளில் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஈடுபாடு என மக்களை பாதிக்கும் அனைத்து பிரச்சனைகளிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சமூக அக்கறை யோடு தங்களது எதிர்ப்பை தெரிவிப்பதில் முத்திரை பதித்துள்ளது.

சத்துணவு, அங்கன்வாடி, கிராம சுகாதார செவிலியர்கள், செவிலியர்கள் என்று முழு அளவில் பெண் ஊழியர்கள் கொண்ட துறைகளில் நியாயமான நம்பிக்கையை நமது ஸ்தாபனம் உண்டாக்கியுள்ளது.

மதிப்பூதியம், தொகுப்பூதியம் ஒழித்தல், சிபிஎஸ் ரத்து செய்தல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி 2016 பிப்ரவரி 10 முதல் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், மறியல் என்று நாளுக்கு நாள் பெண் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து இறுதியாக காத்திருப்புப் போராட்டத்தில் குடும்பம், உறவுகளையும் மறந்து போர்க்குணத் தோடு இரவு பகலாக போராட்ட இடத்திலேயே தங்கியும், உணவு சமைத்தும் நடத்திய காத்திருப்புப் போராட்டமே பெண் அரசு ஊழியர்கள், அரசு ஊழியர்கள் இயக்க வரலாற்றில் இப்படியும் போராட்டம் நடத்த முடியுமா? என்ற ஆச்சர்யத் தோடு ஸ்தாபன அனுபவத்தையும் கற்றுக் கொடுத்த நிகழ்வால் 19.2.2016-ல் 11 அறிவிப்புகளை மறைந்த முன்னாள் முதல்வரால் சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் 11 அறிவிப்புகளை வெளியிட்டு ஒரே வாரத்தில் அரசாணைகளை பெற்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போராட்த்தால் ஸ்தாபனமே நமது வாழ்வாதாரத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை கீற்று பெண் அரசு ஊழயர்கள் மத்தியில் ஒளி வீசுகிறது என்று சொல்வதில் ஆச்சரியமிருக்காது.

ஊதிய மாற்றம், சிபிஎஸ்-ஐ ரத்து செய்தல் உள்ளிட்ட பிரதான கோரிக்கைகளை முன்வைத்து ஜாக்டோ-ஜியோ 8.5.2018 அன்று மாநிலந் தழுவிய பேரணி சென்னையில் என்ற முடிவுக்கு தமிழக அரசு அனுமதி மறுத்தாலும் சென்னை சேப்பாக்கம் வளாகத்தையே ஒரு நாள் முழுவதும் ஜாக்டோ-ஜியோவின் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆயிர மாயிரம் அரசு ஊழியர்-ஆசிரியர்களில் கணிசமான பங்கை பெண் ஊழியர்களின் பங்கேற்பால் காவல் துறையில் பாதுகாப்பிற்காய் வந்த பெண் காவலர் களும் புதிய பென்சன் என்ற அரக்கனை ஒழிக்க வெளியில் இருந்து உங்களோடு இருப்பதில் மகிழ்ச்சி என்ற வர்க்க ஒற்றுமை சேர்ந்ததைக் கண்டு பெண் ஆசிரியர்-அரசு ஊழியர்களுக்கு அரசு என்ற அடக்குமுறை கருவியாய் காவல் துறை இருந்தாலும், அவர்களுக்கும் தெரிகிறது. சிபிஎஸ்-ஐ ஒழிக்க இந்த அமைப்பே சரியானதென்ற நம்பிக்கைக் கீற்று மேலும் வலுப்பெற்றது.

ஜாக்டோ-ஜியோ 4.7.2017 அன்று ஈரோட்டிலே போராடுபவர்களை ஒன்றிணைத்து எடுத்த முடிவின்படி செப்டர்பர் 7-ல் எழுச்சி கனலாய் துவங்கியது வேலை நிறுத்தம். பெண் ஆசிரியர்களின் அரசு ஊழியர்களின் ஒருமித்த குரலான கோபா வேசத்துடன் பங்கேற்ற நிகழ்விலே போருக்கு வராத ஆண் ஊழியர்களை பெண் அரசு ஊழியர்களும்-ஆசிரியர்களும் வரவழைத்த போராட்டமாக மாறி யது என்றால் அதுதான் நிஜம். வேலை நிறுத்தத்திற்கு நீதிமன்றம் தடை விதித்தாலும், 8ஆம் தேதி மாவட்ட அளவில் ஆர்ப்பாட்டம். பெண் ஊழியர்கள் பல்லாயிரக்கணக்கில் அச்சமின்றி திரண்டு வந்த விதம் 2003-ல் கிடைத்த அனுபவத்தையும், தைரியத்தையும் கூடுதலாக்கியிருந்தது.

கல்லில் இருந்து நார் உரிக்க முடியும் என்ற நிகழ்வில் வேலை நிறுத்தத்தை தொடர்வது என்ற முடிவால் பெண்கள் மென்மையானவர்கள் மட்டு மல்ல திண்மையானவர்களும் ஆவர் என்ற ரீதியில் செப்டம்பர் 11 முதல் மீண்டும் வட்ட அளவில் என அளவு மாற்றத்தை அதிகரித்தால் நீதிமன்ற தடையாணையை ஒரு பொருட்டாகவே நினைக் காமல் கோரிக்கைகளின் நியாயத்தை மட்டுமே நெஞ்சுரமாக்கி அதிக எண்ணிக்கையில் பங்கேற்ற மையால் நீதிமன்ற அவமதிப்பு என நீதிமன்றம் உத்தரவிட்டு செப்டம்பர் 15-ல் போராட்டத் தலைவர்களை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட் டுள்ளதே என்று அஞ்சாமல் நீங்கள் சென்று வாருங்கள் என்று தலைமைக்கு அனுமதி கொடுத்து போராட்டக் கனல் அணையாமல் லட்சக்கணக்கில் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் போராடி சிறை சென்றனர். நாடாளுமன்றம் 16 ஆண்டுகளாக நிறைவேற்றாத 33% இடஒதுக்கீடு நொறுக்கப்பட்டு 50%-ஐ தாண்டி பெண் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களம் ஜாக்டோ-ஜியோ வேலை நிறுத்தத்தில் பங்கேற்று முத்திரை பதித்த வரலாறும் மாவட்ட ஆட்சியர் அலுவலங்களில் நடைபெற்ற காத்திருப்புப் போராட்டமும் - காவல் துறையின் அடக்கு முறைகளை தூளாக்கியது.

போராட்டத் தீ வேகமாக வளர்ந்து அரசு நிர்வாகத்தை முடமாக்கியது. அன்று தலைமைச் செயலக ஊழியர்களும் காத்திருப்புப் போராட்டத்தை நடத்தியதால் பெண் ஊழியர்களின் அதிகமான பங்கேற்பால் மேலும் வலு சேர்த்து அனைத்து தடைகளை உடைத்த மாறுபட்ட போராட்டமாக தலைமைச் செயலாளரை நீதிமன்றத்திற்கு வரவழைத்த போராட்டமாக நமது கோரிக்கையின்

நியாயத்தை நீதிமன்றம் உணர்ந்த போராட்டமாக மாற்றியதால் பெண் ஊழியர்களும், ஆசிரியைகளும் பெருமிதத்தோடு பணிக்கு திரும்பி, போராடாத வர்களுக்கும் சேர்த்தல்லவா? ஊதிய மாற்றத்தை பெற்றுத் தந்த வரலாற்றில் முத்திரை பதித்த போராட்டமாக மாற்றிய வல்லமை பெண் ஆசியர் களும், அரசு ஊழியர்களுக்கு உண்டடென்றால் அது கடந்த கால போராட்டங்கள் கற்றுக் கொடுத்த அனுபவமே.

லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கடந்த காலங்களில் போராடி பெற்றுத்தந்த உரிமைகளை 1.4.2003-க்கு பிறகு பணியில் சேர்ந்த ஊழியர்களின் புதிய பென்சன் திட்டம் என்ற போர்வையால் பிடித்தம் செய்து வைத்துள்ள 20 ஆயிரம் கோடியை கார்ப்பரேட்டுகளுக்கு அரசு தாரை வார்க்க தவிர்க்கும் நிலையை ஊழியர்களுக் கும், மக்களுக்கும் பிரசாரம் செய்ததும், நமது போராட்டத்தின் நியாயத்தை ஒன்றுபடுத்தி அரசிய லமைப்பு சட்டம் வழங்கியுள்ள போராட்ட உரிமைகளை அரசுகளும், நீதிமன்றங்களும் சில நேரங்களில் தவறான அணுகுமுறையை கையாளு கின்ற சில நேரங்களில் தவறான அணுகுமுறையை கையாளுகின்றபோது, வீதி மன்றத்தில் நாம் களமிறங்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளதால் நமது நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையிலும் நீதிமன்றத்தில் நமது வழக்கு முடிவுக்கு வராத நிலையிலும் 21.2.2018 முதல் தொடர் மறியல் என்ற முடிவின்படி நான்காம் நாள் 24.2.2018 அன்று பெண்கள் தலைமையேற்று மறியல் போராட்டத் தினை சக்தியாக நடத்தியது வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டமாகும்.

அன்றைய தினம் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் பெண் ஆசிரியர், அரசு ஊழியர் களின் திண்மையான போராட்டத்தால் குலுங்கியது. காவல் துறை தவியாய் தவித்தது. அன்றைய தினம் பாரத பிரதமர் மோடி அவர்கள் சேப்பாக்கம் கலைவாணர் அரங்கில் மானிய விலையிலான இரு சக்கர வாகனம் வழங்கும் விழாவுக்கு அவ்வழி யாகத்தான் வரவேண்டிய ஏற்பாடுகள், பெண் ஊழியர்கள் ஒருமித்த குரலாய் எங்களின் அந்திம கால பென்சனை தர மறுக்கின்ற மோடியை இன்று இந்த இடத்தில் சந்திப்பது என்ற முழக்கமும், காவல் துறையினரையும் கலங்க வைத்த போராட்டம் என்றால் மீண்டும் ஒரு வீர சரித்திரத்தை அன்று பெண் ஊழியர்களும், ஆசிரியைகளும் படைத்தனர்.

ஆனால், இந்த அரசு இடிப்பாரை இல்லாத ஏமறா மன்னானவே ஜல்லிக்கட்டு முதல் நீட், ஸ்டெர்லைட், ஹைட்ரோ கார்பன், மீத்தேன் உள்ளிட்ட மக்கள் பிரச்னைகளிலும், மதிப்பூதியம், தொகுப்பூதியம் ஒழித்தல், புதிய பென்சன் திட்டம் ரத்து செய்தல் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் பிரச்னைகளிலும் பொய்யான காரணங்களால் திசை திருப்பப்படும் நிலையை உருவாக்குகிறது.

மக்களிடமும், அரசு ஊழியர்-ஆசிரியர்களிடமும் ஏராளமான சந்தேகங்கள் உள்ளன. அதனை தீர்ப்பது அரசின் கடமை. மக்களின் கருத்துக்கேற்பவே எந்தத் திட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும். திட்டங் களை நிறைவேற்ற இந்திய அரசு சொல்லும் விடுமுறைகளும் கவனத்தில் கொண்டிருக்கின்றன. மக்கள் கருத்து கேட்புக் கூட்டங்கள் என்ற முறையை அதன் நிமித்தமே உருவாக்கப்பட்டிருக்கிறது. மக்களும், ஊழியர்களும் எதிர்க்கிறார்கள் என்றால் அரசு அவர்களிடம் பேச வேண்டும். மக்களின் சந்தேகங்களை ஆட்சியாளர்கள் போக்க வேண்டும். அதுதான் முறை. ஆனால், காவல் துறையை பயன் படுத்தி விமர்சிப்போர், எதிர்ப்போர் என ஒவ்வொரு பிரிவினரையும் கைது செய்து வாயை அடைத்துவிட எத்தனிக்கிறது தமிழக அரசு. எதேச்சதிகாரமான போக்கு இது. இந்த விசயத்தில் மக்களின் எதிர்ப்பை உணர்ந்த மத்தியஅரசு குறுக்கே தலையிட்டு மாநில அரசிடம் மக்கள் கருத்தை கேட்கச் சொல்லியிருக் கிறது. மக்களிடம் இருந்து அரசின் திட்டங்களை நிறைவேற்றும் அரசு ஊழியர்-ஆசிரியர்களிடத்தில் இருந்தும் இன்றைக்கு மாநில அரசு எவ்வளவு அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கான ஓர் உதாரணமே ஆகும்.

மக்களின் போராட்டங்களும், அரசின் சக்கரங் களாக சுழலும் அரசு ஊழியர், ஆசிரியர்களின் போராட்டங்களும் வெறுமனே எதிர்ப்பை மட்டுமே வெளிப்படுத்துவன அல்ல. அவர்களின் நம்பிக்கை யும் அதில் உள்ளது.

கோரிக்கையை உரிய முறையில் கவனப்படுத்தி னால் அரசு அதை பரிசீலிக்கும் என்ற அந்த நம்பிக்கைதான் மக்களுக்கும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை அரசின் திட்டங்களை கடைகோடி மனிதனுக்கும் சேர்க்கும் அரசு ஊழியர்களை அரசே அழைத்து கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்ற நம்பிக்கையும்தான் அரசுக்குமான உறவின் பிணைப்பும்கூட. அதை ஒரு அரசு அடக்குமுறை, கைதுகளின் மூலம் அணுகும் போது அரசுக்கும், மக்களுக்குமான பரஸ்பர நம்பிக்கை அற்றுப்போகிறது. மக்களின், அரசு ஊழியர்களின், ஆசிரியர்களின் நம்பிக்கையை இழக்கும் ஆட்சியாளர்களின் ஆட்சி என்னவாகும் என்பதற்கு வரலாறு நெடுகிலும் சான்றுகள் இருக்கின்றன.

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

# உழைப்பைச் சுரண்டும் கார்ப்பரேட்டுகளும், கார்ப்பரேட்டுகளை ஊக்குவிக்கும் அரசுகளும்

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்திடக் கோரி மிகப்பெரிய முன்னெடுப்பினை ஜாக்டோ-ஜியோ செய்து வரும் வேளையில் அது குறித்து கிஞ்சித்தும் கவலையில்லாமல் மத்திய, மாநில அரசுகள் தன் போக்கில் தொடர்வதற்கான உள்ளார்ந்த நோக்கம் உலகமயம் அறிமுகம் செய்திட்ட 'அமர்த்து துரத்து' என்ற கொள்கையேயன்றி வேறொன்றுமில்லை. இன்றைக்கு லட்சக்கணக்கில் ஊதியம் பெறும் ஐ.டி. கம்பெனிகளில் பணிபுரியும் பலர் வேலை நாட்கள் இன்று தொடர்கிறதா என்பதை தினசரி ஸ்வைப் செய்து அறிந்து கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையிலேயே தமது பணிகளைத் தொடர்கின்றனர். உலகம் முழுவதும் உழைப்பைச் சுரண்டிவிட்டு சக்கையாய் வீட்டுக்கு அனுப்புவதும், எதிர்காலம் குறித்த எண்ணமே ஏற்படாதவாறு நிகழ்காலத்தை நுகர்வுக் கலாச்சாரத்தில் பிணைத்து வைத்திருக்கக்கூடிய மாய வித்தையை உலகமயம் கற்றுத் தேர்ந்திருக்கிறது. இந்நிலையில் ஒட்டுமொத்தமான உழைப்புச் சுரண்டலுக்கெதிரான பரந்துபட்ட போராட்டத்தை முன்னிறுத்திட வேண்டிய அவசியமும் அவசரமும் தொழிற்சங்கங்களுக்கு உள்ளது. 75 சதவீத மக்களுக்கு வேலை வாய்ப்பினையும் 48 சதவீத வருமானத்தையும் தந்து வந்த விவசாயத் துறை முழுமையாகச் சரிந்து ஆண்டிற்கு 2 சதவீத வளர்ச்சியை மட்டுமே தரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆனால், இன்றைக்கும் இந்திய மக்கள் தொகையில் 55 சதவீதம் பேருக்கு வேலைவாய்ப்பினை இத்துறை நல்கி வருவது சிந்திக்க வேண்டிய விசயமாகும். ஆனால், இத்தகைய பெருமைமிகு விவசாயிகள் மனிதர்களாகவே மதிக்கப்படுவதில்லை என்பது இந்நாட்டின் அவலம். இத்துறை நசிந்துபோகும் போது வேலை தேடி நம்மை நோக்கி வரும் வேலைச் சந்தையை மிக இலாபகரமான முறையில் பயன்படுத்திக் கொள்ள தொழில்துறை ஒருபோதும் தயங்குவதில்லை. உலகம் முழுவதும் ஆன்லைன் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறக்கும் அமேசான் நிறுவனத்தில் 5,60,000 ஊழியர்கள் பணிபுரிவதாகவும், அவர்களில் குடோனில் வேலை பார்க்கும் ஓர் ஊழியர் ஒன்பது விநாடிக்கு ஒரு பொருளை பேக்கிங் செய்வதாகவும் ஒரு மணி நேரத்தில் 300 பொருட்களை பேக்கிங் செய்வதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தினசரி பத்து மணி நேரம் பணிபுரியும் இத்தொழிலாளர் குடோனில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய பொருளைத் தேடி ஒரு நாள் பணிபுரியும் 10 மணி நேரத்தில் 15 மைல் தூரம் நடப்பதாகவும் தெரிய வருகிறது (தமிழ் இந்து 30.4.2018). மேலும் தனது பணி நேரத்தில் தனக்குரிய குறியீட்டை முடிக்கவில்லையெனில் மறுநாள் வேலையில் தொடர முடியாதென்ற பயத்தில் ஓய்வறை சென்று சிறுநீர் கழிப்பதை தவிர்ப்பதாயும், சிறுநீர் வந்தால் பாட்டிலில் பிடித்து வைத்து அதை பணி முடிந்து வீட்டுக்குச் செல்கையில் கழிவறையில் விட்டுச் செல்வதாக பிரிட்டன் சன் பத்திரிகை நிருபர் ஜேம்ஸ்பிளட்வொர்த் குறிப்பிடுகிறார்.

இத்தகைய நெருக்கடிக்கு என்ன காரணம்? வேலையின்மையும், வேலை கிடைத்தவுடன் தன்னைச் சுற்றி உருவாக்கிக் கொள்ளும் நுகர்வுப் பழக்கமுமேயாகும். மனிதனின் அன்றாட உணவுத் தேவைகளுக்கு கடன் கொடுக்க மறுக்கும் பல நிறுவனங்கள், விவசாயிகளுக்கு கடன் கொடுக்க மறுக்கும் பல நிறுவனங்கள், போட்டிபோட்டு செல்போன், கணினி, இரு சக்கர வாகனங்கள் என பலவற்றிற்கு மாத தவணையில் கடன் தந்து நச்சுச் சூழலில் சிக்க வைக்கின்றனர்.

இத்தகைய நுகர்வு நச்சுச் சூழலில் உழைப்பாளி வேறு வழியின்றி தினசரி தனது உழைப்பைத் திருடுவதை அறியாமலே தொடர்ந்து பணிபுரிகிறார். இன்றும் அரசின் பல அலுவலகங்களில் நிரந்தரமான ஊழியர் யாரும் அழைக்காமலே வந்து சனிக்கிழமைகளில் பணிபுரிகின்றனர். அதேபோன்று மருத்துவத் துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, போக்குவரத்துத் துறை, வேளாண் துறை என பல துறைகளில் ரூ.10,000க்கும் ரூ.15,000க்கும் தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஆட்களை தேர்வு செய்ய பல நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்ததாரர்கள் மாதம் 6,500 முதல் 10,000 மட்டும் வழங்கி ஆயிரக்கணக்கான ஊழியர்களை அமர்த்தியிருக்கிறார்கள். இவர்களை வேலை வாங்குபவர்கள்

இவர்களுக்கு இடும் கட்டளைகள் சொல்லி மாளாது. அரசுப் பணம் பெறும் இடைத்தரகர்கள்தான் இவர்களின் எஜமானர்களாயிருக்கின்றனர். மத்திய, மாநில அரசுகள், அரசுப் பணிகளில் ஒப்பந்ததாரர்கள் என்ற பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடைமுறையிலிருந்த புதிய ஜமீன் முறை அறிமுகப்படுத்தி உழைப்புச் சுரண்டலை ஏகபோக உரிமையாக்கியுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் ஓர் கணினி ஊழியருக்கு பணிபுரியும் கட்டளையிடுவது ஒரு வளர்ச்சித் துறை அலுவலராயிருப்பார்.

ஆனால், அவருக்கு ஊதியம் அந்தந்த மாதம் வழங்கப்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்கு கூட ஓர் அமைப்பு இல்லை. ஏனெனில், ஒப்பந்ததாரர் ஓர் இடத்திலும், பணிபுரிபவர் ஓரிடத்திலுமிருப்பார். இந்த மாத சம்பளம் அடுத்த மாதம் 25ஆம் தேதி முதல் அதற்கடுத்த மாதம் 5ஆம் தேதிக்குள் வரும் என்ற நிலை உள்ளது. ஆனால், இந்த ஒப்பந்ததாரர்கள் முன்னதாகவே அரசிடம் பணத்தைப் பெற்று விடுகின்றனர். இப்படியாக பணியில், வேலை நேரத்தில், வேலை வழங்கும் கால அளவுகளில் என்று கார்ப்பரேட்களில் மட்டுமல்ல கார்ப்பரேட்டுகளால் அரசுத் துறையிலும் உழைப்புச் சுரண்டல் தொடர்கிறது. ஒப்பந்தாரர்கள் என்ற புதிய ஜமீன்களை அரசு அலுவலகங்களிலிருந்து துரத்திடும் புதிய முடிவுகளை எடுக்க வேண்டிய தொழிற் சங்கங்களின் புதிய கடமையாகிறது.

- **முனைவர் மதுரை சுகி**

---

**வளர்ச்சி....**

அந்நிய தேசத்தில்
ஆட்சியிலிருக்காமல் சுரண்டும்
வித்தை தெரிந்தது
உலகமயம்
அதன் ஒரே ஆயுதம்
வளர்ச்சி....
வளர்ச்சி
மட்டுமே....
யாருடைய
வளர்ச்சி
யாருமறியார்...
நான்கு
வழிச்சாலையும்
எட்டுவழிச்சாலையும்
இயங்கி
இயங்கி
எங்களை
எங்கே
கொண்டு
சேர்த்தது...
இன்னும்
குடிக்கும்
கஞ்சிக்கும்
கூழுக்கும் கூட
உப்பை
தூரத்தில் தானே
வைத்தது....
படித்த
படிப்பிற்கும்
பயன்பாட்டிற்கும்
தூரம் தானே
தந்தது.....
உணவு தானிய
உற்பத்தியை
கண்டோம்
இன்னும்
பட்டினியில்
உயிர் போவதை
எங்கே தடுத்தோம்..
மலை குடைந்தோம்
சுரங்கம்
கண்டோம்
இன்னும்
தாராவியையும்
கூவத்தையும்
குப்பத்தையும்
சுத்தம்
செய்ய
இயலலேயே
எல்லாம்
வளர்ச்சி.
எனும்
மாயை
தந்த
பேயை
துரத்தி
அனுதினமும்
சோர்ந்து போகும்
ஏழைக்கூட்டம்
வளர்ச்சி
என்று சொல்லி
வயிற்றில்
அடிக்கும்
மாயக்கூட்டம்
இரண்டையும்
இமைப்பொழுதும்
இணையவிடா
உலகமயம்....

- **முனைவர் மதுரை சுகி**

# சர்வதேச கம்யூனிஸ்ட் தலைவர் ஜார்ஜ் டிமிட்ரோவ்

பல்கேகேரியா நாட்டின் கம்யூனிஸ்ட் தலைவரான ஜார்ஜ் டிமிட்ரோவின் சேவை உலகப் பாட்டாளி வர்க்கம் முழுமைக்கும் கிடைக்கப் பெற்று அவர் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவராக விளங்கினார்.

1909ஆம் ஆண்டு ஸ்வீடன் நாட்டுத் தொழிலாளர்கள் பிரம்மாண்டமான வேலநிறுத்தம் நடத்துகையில் எழுச்சி உரையாற்றிய டிமிட்ரோவ் " போற்றத்தக்க வகையில் போராடும் ஒவ்வொரு போராளிக்கும் எல்லா வகையான ஆதரவையும் அளிக்க வேண்டுமென்று நமது சர்வதேசக் கடமை கட்டாயப்படுத்துகிறது." எனப் பேசி போரட்டத்தைத் தூண்டிவிட்டார். பல்கேரியப் பாட்டாளிகளின் சர்வதேச ஒற்றுமை உணர்வு மேலோங்கி வளர்ந்தது. ஜெர்மனி, பெல்ஜியம், பிரிட்டன், நார்வே, ருமேனியா, செர்பியா மற்றும் இதர நாடுகளிலும் வேலைநிறுத்தம், கதவடைப் புகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவாகவே இருந்த போதிலும் நிவாரண நிதியும் பொருள்களும் வழங்கினர்.

1909ல் பெல்கிரேடிலும் 1915ல் புகாரெஸ்டிலும் நடைபெற்ற பால்கன் பிரதேச சமூகப்பணி ஜனநாயகவாதிகளின் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட டிமிட்ரோவ் ஏகாதிபத்திய எல்லை விரிவாக்கம், பூர்ஷுவா அரசுகளின் தேசிய வெறியுணர்வுகள் ஆகிவற்றை அம்பலப்படுத்திப் பேசினார்.

1911ல் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற ஏழாவது சர்வதேச தொழிற்சங்க மாநாட்டின் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். 1913ல் வியன்னாவில் நடைபெற்ற பால்கன் பிராந்திய தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்றார்.

இரண்டாவது அகிலம் எனும் சர்வதேச அமைப்பிலிருந்து இடதுசாரி சோஷலிஸ்டுகள் வெளியேறி தொழிலாளி வர்க்கத்துக்கேற்ற சர்வதேச அமைப்பை உருவாக்கும் போராட்டத்தில் முன்னின்றார். போர் முடிந்து 1919 மார்ச்சில் லெனின் தொடங்கிய 3வது அகிலம் அமைப்பதில் பங்கேற்று உண்மையான சர்வதேசப் பதாகையை உயர்த்திப் பிடித்தார்.

1920ல் நவம்பர் 3,4 தேதிகளில் சோபியாவில் நடைபெற்ற பால்கன், டான்யூப் நாடுகளின் முதல் தொழிற்சங்க மாநாட்டை நடத்தியவர்களில் பிரதானமானவர் டிமிட்ரோவ். மாநாட்டு அறைகூவலின்படி டிமிட்ரோவ் முழுப் பொறுப்பு வகித்து பால்கன் பிராந்திய தொழிற் சங்க இயக்கங்களை ஒன்றிணைந்து புரட்சிகரப் பாதையில் இட்டுச் சென்று பால்கன் பிராந்திய கம்யூனிஸ்ட் சமஷ்டியை உருவாக்க முயன்றார்.

சர்வதேச தொழிலாளர் வர்க்க கம்யூனிஸ்ட் இயக்கங்களில் டிமிட்ரோவ் பிரபல தலைவரானார். 1920ல் நடைபெற்ற 2வது சர்வதேச கம்யூனிஸ்ட் மாநாட்டில் கலந்து கொண்டார். சர்வதேச கடமையை நிறைவேற்ற ரஷ்யாவிற்குச் செல்ல அபாயம் நிறைந்த கருங்கடலில் சிறிய மீன்பிடி படகில் சென்றார். இதனால் கைது செய்யப்பட்ட டிமிட்ரோவ் சோவியத் அரசின் தலையீடு மற்றும் ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் ஆகியவற்றால் 20 களுக்குப் பின் விடுதலை யானார்.

லிவர்னோவில் நடைபெற்ற இத்தாலி சோஷலிஸ்ட் கடசியின் 17வது காங்கிரஸில் பங்கேற்றார்.

வெகு ஜனப் புரட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது அவசியம் என்று சர்வதேச கம்யூனிஸ்டுகளின் முதல் காங்கிரஸ் விடுத்த அறைகூவலையும், லெனினது ஆலோசனைகளையும் டிமிட்ரோவ் ஏற்றுக் கொண்டார். 1921 ஜூலை 3 முதல் 22 தேதி வரை மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச தொழிற்சங்க காங்கிரசிலும் அதற்கான தயாரிப்புப் பணிகளிலும் முக்கியமான பங்கு வகித்தார்.

மாஸ்கோவிலிருந்து பல்கேரியா திரும்பும் வழியில் டிமிட்ரோவ் பெர்லினில் தங்கி பத்திரிகையில் எழுதினார். அவை ஜெர்மனியிலிருந்து கடிதங்கள் என்ற தலைப்பில் பிரசுரமாயின.

1923 டிசம்பர் 17ல் பால்கன் பிராந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சம்மேளன தலைமைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் செயலாளர் ஆனார். பல்கேரியா, கிரீஸ், யுகோஸ்லேவியா, ருமேனியா ஆகிய பால்கன் நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையேற்று அப்பிராந்தியத்தில் நிலவிய ‘வெள்ளைக் கொடுமையை’ எதிர்த்துப் பிரச்சாரம்

செய்து ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்கு வழி கோலினார். உயிருக்கு ஆபத்து சூழ்ந்திருந்த நிலையிலும் ஆஸ்திரிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சனைகளைத் தீர்க்க அரும்பாடுபட்டார்.

1924 ஜனவரி 23 அன்று கோர்க்கி நகரிலிருந்து மாஸ்கோவுக்கு லெனின் பூதவுடலை எடுத்துச் செல்லும் சர்வதேச கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

சர்வதேச தொழிற்சங்க 3வது காங்கிரஸிலும் அதன் நிர்வாகக்குழுவிற்கு மீண்டும் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

1927-28ல் வியன்னாவில் இரண்டாம் முறை தலைமறைவு வாழ்வை டிமிட்ரோவ் மேற்கண்ட போது அவரது பல்வேறு பணிகளுக்கும் ஆஸ்திரிய கம்யூனிஸ்டுகளிடமிருந்து உதவிகள் கிடைத்தன. 1928 மார்ச் மாதம் பாமாண் என்ற பெயரில் சர்வதேச தொழிற்சங்கத்தின் 4வது அகித்தில் கலந்து கொண்டு, வளர்ந்து வரும் பாசிச அபாயம் குறித்தும், எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டம் குறித்தும் பேசினார்.

இதே ஆண்டு சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்கத் தலைவர் கிளாரா ஜெட்கினைச் சந்தித்தார். அதன் விளைவாக ஜெலட்டின் டிமிட்ரோவ் மனைவிக்கு கடிதம் எழுதினார். அதில் " உங்கள் கணவர் இங்கிருந்த பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எதிர்காலம் பற்றிய எனது சிந்தனைக்கு உரமிட்டார். தற்கால நிலை எளிமையானதாக இல்லை எனினும் எதிர்காலமும் அவ்வாறேதான் இருக்கும் என நம்புகிறேன். உங்கள் இருவரைப் போன்றவர்கள் எம்மிடையே இருக்கையில் சரித்திரம் நமக்குச் சாதகமாக செயல்படும் " என்று குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

சர்வதேச கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆணையை ஏற்று பல்வேறு ஐரோப்பிய உலக ஸ்தாபனங்களின் போராட்டங்கள், மாநாடுகள், பிளீனக் கூட்டங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்து அவற்றில் பங்கேற்றார். 1929ல் சர்வதேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாடு, 1930ல் ஐரோப்பிய விவசாயிகள் மாநாடு,1931ல் சர்வதேச தொழிலாளர்களின் நிவாரணக் குழுவின் 8வது பேராயம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.1932 ஆகஸ்டில் ஆம்ஸ்ட்டர்டா மில் நடந்த சர்வதேச எதிர்ப்புப் பேரவையில் உலக யுத்த எதிர்ப்புக்குழு உறுப்பினராக தே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜெர்மனியில் அதிபயங்கரமாக பாசிச சக்தி வளர்ந்து வருவதை டிமிட்ரோவ் உன்னிப்பாக கவனித்து வந்தார். 1933ஆம் ஆண்டு ஜனவரி 30-ல் ஜெர்மனியின் பாசிச சர்வாதிகாரத் தலைமைப் பொறுப்பில் ஹிட்லர் அமர்த்தப்பட்டபோது



**ஜார்ஜ் டிமிட்ரோவ்**

டிமிட்ரோவ் உயிருக்கு அபாயம் இருந்த போதிலும் தொடர்ந்து பெர்லினிலேயே செயல்பட்டார்.

1933 பிப்ரவரி 27 அன்று ஜெர்மனி நாடாளு மன்றத்திற்குத் தீ வைக்கப்பட்டது.அதற்குக் கம்யூனிஸ்டுகள்தான் காரணம் என பாசிச அரசு புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டது. தீப்பிடித்த இரவு காவல் துறையும் ராணுவமும் நூற்றுக்கணக் கான கம்யூனிஸ்டுகளின், சமூக ஜனநாயகவாதிகளின், முற்போக்காளர்களின் வீடுகளைத் தாக்கி அவர்களைக் கைது செய்தது. இது தொடர்பான விசாரணை துவங்கியபோதே டிமிட்ரோவும் பங்கு பெற்றதாக ஜோடிக்கப்பட்டது. டிமிட்ரோவ் 1933 ஏப்ரல் 4ல் கைவிலங்கிடப்பட்ட நாளிலிருந்து அதை அகற்றக் கோரி 5 மாதங்கள் போராடினார்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டின் போன்ற பிரபலமான விஞ்ஞானிகளும், கலைஞர்களும், முற்போக்காளர் களும் உண்மையாக நாடாளுமன்றத்திற்குத் தீ வைத்தவர்களைப் பற்றி அம்பலப்படுத்தி குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏதும் அறியாத மக்களைக் காப்பாற்றும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். டிமிட்ரோவ் நீதிமன்ற விசாரணையில் அதன் போக்கையே மாற்றிவிட்டார். "பொறுப்புள்ள நான் கம்யூனிஸ்ட் முன்னோடிகளில் ஒருவனாக இருப்பதனால் பல்கேரியா கம்யூனிஸ்ட் கட்சி

முடிவுகளுக்கும், சர்வதேச கம்யூனிஸ்ட் கழகத்தின் முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு முழுப் பொறுப்பு ஏற்கிறேன். நான் பயங்கரவாதியல்ல. கனாக்காணு பவனுமல்ல. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும், பாட்டாளி வர்க்க சசர்வாதிகாரத்திற்கும் நான் ஆதரவாளன். ஆனால் அதே காரணங்களுக்காக தனிநபர் பயங்கரவாதத்தை எதிர்ப்பவன்" என முழங்கினார்.

மிட்ரோவ் தமக்காகவும், தமது வாழ்க்கைக் காகவும், தமது பாதுகாப்புக்காகவும் மட்டுமே சிந்திக்காமல் கட்சியின் நலனுக்காகவே தம்மையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்." என்று பிராவ்தா எழுதியது. ஜோடிஜோடிக்கப்பட்ட சாட்சிகள் பற்றியும் கட்டுக் கதைகள் பற்றியும் டிமிட்ரோவ் 'சாத்தானின் வட்டம்' எனும் படைப்பில் அம்பலப் படுத்தினார். ரீஷ்டாக் மீது தீ வைத்ததில் கம்யூனிஸ்டு களுக்குப் பங்குக்கு என்று பல்கேரியாவிலோ அல்லது மற்ற நாடுகளிலோ எவரும் நம்பப் போவதில்லை என டிமிட்ரோவ் தமது கடைசி உரையில் குறிப்பிட்டார். "ஆனால் ஜெர்மனியின் நிலை வேறுபட்டுள்ளதால் இத்தகைய அபத்தங்களை நம்பத்தான் செய்வர். இந்தக் காரணத்திற்காகத் தான் இந்த சம்பவத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எத்தகைய தொடர்புமில்லை என்பதை நிரூபிக்க விரும்புகிறேன் " என்று கூறினார். 1933 டிசம்பர் 23ல் டிமிட்ரோவ் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் பாதுகாப்புக் கைதியாகப் பிடிக்கப்பட்டார்.1934 பிப்ரவரி 27ல் டிமிட்ரோவ் விடுவிக்கப்பட்டார்.

தொழிலாளர் வர்க்கமும் ஜனநாயக சக்திகளும் விரிந்த அளவில் ஒன்றிணைந்து பாசிசத்திற்கு பதிலடி கொடுத்து யுத்தம் அபாயத்தைத் தடுக்க வேண்டும் என்பது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கங்களின் ஏழாவது பேராயத்திற்கு டிமிட்ரோவ் தயாரித்த அறிக்கையின் இரண்டாவது பொருளின் மையமாக இருந்தது. சர்வதேச கம்யூனிஸ்ட் கழகத்தின் நிர்வாகக் குழு செயலாளராக டிமிட்ரோவ் தேர்வு செய்யப்பட்டார். சர்வதேச கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அனைத்து நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி பாசிசத்தையும் யுத்தத்தை யும் எதிர்க்கும் போராட்டத்திலும் அனைத்து சக்திகளையும் இணைப்பதிலும் ஏழாவது பேராயத் தின் முடிவுகளை ஆக்கப் பூர்வமாக செயல்படுத்து வதிலும், கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் மத்தியில் உறவையும் பலத்தையும் வலுப்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.

தீவிரமான தத்துவார்த்த அரசியல், ஸ்தாபனங் களின் நடவடிக்கைகள் ஆகியவற்றில் டிமிட்ரோவ் பெரிதும் அக்கறை செலுத்தினார். சோவியத் யூனியன் மீதான யுத்தத்திற்கு எதிராகவும், பாசிச அடக்குமுறை அபாயத்திற்கு எதிராகவும் சர்வதேச பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களைத் திரட்டி யுத்தம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் ஈடுபட்டபோது அதன் நாயகனாக விளங்கினார். எத்தியோப்பியா மீது பாசிச இத்தாலி தாக்குதல் தொடுத்ததற்கெதிராக நிர்ப்பந்தித்து கூட்டாக செயல்பட சர்வதேச கம்யூனிஸ்ட் கழகத்தின் நிர்வாகக் குழு சார்பில் சர்வதேச சோஷலிஸ்ட் தொழிலாளர்கள் செயலகத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். பாசிசத்தை எதிர்த்துப் போராடிய ஸ்பெயின் மக்களுக்கு தார்மீக ஆதரவும் பொரு ளுதவியும் தருவதற்கு டிமிட்ரோவ் முன்முயற்சி எடுத்தார்.

இரண்டாம் உலகப் போர் நடந்தபோது பாசிசம் வளர்ந்து அனைத்து நாடுகளுக்கும் நேரடி ஆபத்தாக விளங்கிற்று. டிமிட்ரோவ் ஆக்கத் திறத்தாலும், அரசியல் ஞானத்தாலும் பாசிச தாக்குதல்களைத் தடுக்கவும், தாக்குகின்ற அபாயத்தைத் தடுக்கவும், வெவ்வேறு நாடுகளில் உள்ள தேச பக்த தேசிய முதலாளிகளையும் உள்ளிட்ட தேசிய முன்னணிகளை அமைக்க ஆலோசனை வழங்கினார். பாசிச எதிர்ப்பு இயக்கத்தை முன்கொண்டு செல்லவும், பாசிச ஆக்கிரமிப்பால் அச்சுறுத்தப்படும் நாடுகளின் தேசிய சுதந்திரத்தைக் காக்கவும், நாடுகள் நிலைத்திருக்கவும் கூட கம்யூனிஸ்டுகளும் தொழிலாளர் வர்க்கமும் பொறுப்பேற்றாக வேண்டும் என டிமிட்ரோவ் வலியுறுத்தினார். மக்களை அடிமைப்படுத்தி, நாட்டை அபகரித்தவர்களை எதிர்த்துப் போராடும் முன்னணிப் படையுடன் சேர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

சர்வதேசியத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க பிரதானமான அம்சமாக சந்தேகத்திற்கு இடமின்றி சோவியத் யூனியனை ஆதரிக்க விரும்பாத நாடு, ஒரு புதிய உலக யுத்தத்தையும் ஏற்படுத்தக் கூடிய பாசிஸ்டுகளை எதிர்த்து தீவிரமான போராட்டத்தை நடத்த இயலாதெனத் தெளிவுபடுத்தினார்.

கடுமையாக யுத்தம் நடந்து கொண்டிருந்த போது 1943 ஜுன் 8 தேதியில் சர்வதேச கம்யூனிஸ்ட் கழகம் கலைக்கப்படும் வரை அதன் பொதுச் செயலாளராக பணியாற்றியதும், போல்ஷ்விக் கட்சியின் செய்தித் துறை பிரிவின் தலைவராகத் செயலாற்றியதும் யுத்தத்தையும் பாசிசத்தையும் எதிர்த்தும் பல்லாண்டு கள் நடத்திய போராட்டங்களின் தொடர்ச்சியாகும்.

(ஜுலை 2
ஜார்ஜ் டிமிட்ரோவ் நினைவு நாள்)

- **பெரணமல்லூர் சேகரன்**

# ஐஏஎஸ் கனவுகளின் மீது ஒரு தாக்குதல்

இந்திய அரசின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் ஆட்சிப் பணிகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது மோடி தலைமையிலான பாஜக அரசு. அதாவது, குடிமைப் பணித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களோடு அடித்தளப் பயிற்சிக்குப் பிறகு நடத்தப்படும் தேர்வில் பெறும் மதிப்பெண்களையும் சேர்த்து அதன் அடிப்படையில் மாநில ஒதுக்கீடுகளைச் செய்யலாம் என்ற கருத்து பிரதமர் அலுவலகத்தால் முன்வைக்கப் படுகிறது. இது சமூக நீதியின் மீதான இன்னொரு தாக்குதலாக அமையும்.

இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) உள்ளிட்ட 27 அரசுத் துறைகளுக்கான மத்திய குடிமைப் பணித் தேர்வுகளை மத்திய பொதுத் தேர்வாணையம் ஆண்டுதோறும் மூன்று கட்டங்களாக (முதல் நிலை, முதன்மை, நேர்முகத் தேர்வுகள் என) நடத்தி வருகிறது. இதில் வெற்றி பெறுபவர்களை, அவரவர்களின் தரவரிசைக்கு ஏற்ப, மூன்று மாத கால அடித்தளப் பயிற்சிக்குப் பிறகு சொந்த மாநிலங்களுக்கோ, இதர மாநிலங்களுக்கோ பணிசெய்ய ஒதுக்கீடுசெய்வது வழக்கமாக இருந்துவருகிறது. இதில் பட்டியலின, பழங்குடியின, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான சட்டபூர்வமான ஒதுக்கீடுகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தற்போது பிரதமர் அலுவலகம் இதை மாற்ற முயற்சிக்கிறது.

## ஒரு சிறுகூட்டம் தீர்மானிக்கும்

இப்போதைய நடைமுறை என்னவென்றால், தேர்வர்கள் முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வுகளில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையிலும், அவர்கள் விண்ணப்பங்களில் முன்வைத்துள்ள விருப்பத்தின் அடிப்படையிலுமே அவர்களுக்கு உரிய மாநிலங்களும் பணிகளும் ஒதுக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் பயிற்சிக்குச் செல்லும் தேர்வர்களுக்கு முசௌரியில் உள்ள அரசுப் பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தற்போது பிரதமர் அலுவலகம் முன்வைத்துள்ள முன்மொழிவு என்ன சொல்கிறது என்றால், “தேர்வர்கள் பொதுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களோடு கூடவே, அடித்தளப் பயிற்சிக்குப் பிறகு நடத்தப்படும் தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்களையும் சேர்த்து அதன் அடிப்படையில் மாநில ஒதுக்கீடுகளைச் செய்யலாம்” என்கிறது. அதாவது, முசௌரி அரசுப் பயிற்சி மையத்தில் பணியாற்றும் சில அதிகாரிகளின் ஆளுகைக்குள் ‘தேர்ந்தெடுக்கும் உரிமை’யை மறைமுகமாக இந்த உத்தரவு கொண்டுசேர்க்கிறது. பிராந்திய உணர்வு, மத / சாதி உணர்வு எல்லாவற்றுக்கும் இடமளிக்கும் ஆபத்தைக் கொண்டது இது.

## நட்புணர்வு முறியும்

இன்னொரு பெரிய ஆபத்து - அரசுப் பயிற்சி மையத்துக்கு வரும் தேர்வர்களை உணர்வுரீதியாக இது பிளக்கும் என்பது! குறிப்பிட்ட ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்கள் என்ற நிலையில் ஒருவித தோழமை உணர்வுடன், போட்டி மனப்பாங்கு இல்லாமல் இந்தப் பயிற்சிகளில் தேர்வர்கள் கலந்துகொள்வார்கள். ‘ஒரே பேட்ச்’ என்ற இந்த உணர்வு அவர்களின் பணிக்காலம் முடியும் வரையிலும் தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தோழமை உணர்வின் மூலம் தங்கள் மாநிலங்களுக்குச் சாதகமான பல செயல்களை அவர்களால் பல நேரங்களில் நிறைவேற்றிக்கொள்ளவும் முடிகிறது என்பதே அனுபவபூர்வமான உண்மை.

உதாரணமாக, வெளி மாநிலங்களில் இயற்கைப் பேரழிவில் சிக்கிக்கொண்ட தமிழக சுற்றுலாப் பயணிகளை மீட்டெடுக்க தமிழகத்தில் உள்ள ஒரு அதிகாரி, ஒரே ஆண்டில் பணியில் சேர்ந்த தனது சக அதிகாரியைத் தொலைபேசி மூலம் அணுகியே மீட்புப் பணியை விரைவுபடுத்த முடியும். இதேபோல மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விவரங்களை உடனடியாகக் கேட்டுப் பெறுவது என்பன போன்ற பல விஷயங்களையும் சாதிக்க இந்தத் தோழமை உணர்வு இதுவரை பயன்பட்டு வந்துள்ளது.

சொந்த மாநிலமல்லாத வேறொரு மாநிலத்தில் பணியில் அமர்த்தப்படுபவர்களும் காலப்போக்கில் அந்த மாநில மொழி, கலாச்சாரம் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவு பெறுபவர்களாக, மாநிலங்களிடையே மொழி, கலாச்சார பரிமாற்றத்துக்கு உதவுபவர்களாக உருவாவதையும் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆனால், பயிற்சிக் காலத்தில் நடக்கும் தேர்வில் பெறும் மதிப்பெண்கள்தான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் எனும்போது, மாநிலம் தாண்டிய நட்புணர்வில் விரிசல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

## தவறான முன்னுதாரணம்

சட்டபூர்வமான அமைப்பான மத்திய பொதுத் தேர்வாணையத்தின் தரவரிசை என்பதற்கு மாறாக, மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் இருக்கும் பயிற்சி மையத்தில் நடைபெறும் தேர்வுகளில்

பெறும் மதிப்பெண்களையும் சேர்த்து அதன் அடிப்படையிலேயே ஒதுக்கீடு என்ற ஏற்பாடு வேறு பல ஐயங்களையும் ஏற்படுத்துகிறது. அரசுக்கு நெருக்கமானவர்கள், வேண்டியவர்கள் எனப் பலரையும் இந்த பயிற்சித் தேர்வில் கணிசமாக வெற்றி பெறவைப்பதன் மூலம் தேர்வர்களின் தரவரிசையில் எளிதாக மாற்றம் கொண்டு வந்துவிடலாம்.

இதுவரையில், குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற்று, நேர்முகத் தேர்விலும் வெற்றி பெற்றவர்கள் அரசு நிர்வாகத்தில் தனித்திறன்களை மேம்படுத்த மட்டுமே அரசுப் பயிற்சி மையம் பயிற்சியளித்து வந்தது. இனி, இந்த மையம் அரசு மட்டத்திலிருந்து பல்வேறு வகையான நிர்ப்பந்தங்களுக்கும் அடிபணிய வேண்டிய நிலை உருவாகும். அது, அந்த மையத்தின் நிர்வாகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். இத்தகையதொரு நிலையில் ஆட்சிப் பணிக்காகத் தேர்வு பெற்றவர்கள் மக்கள் சமூகத்துக்குப் பணிசெய்வதற்குப் பதிலாக தங்கள் நலம் விரும்பிகளுக்கு சேவை செய்வதில் கொண்டுவிடும் வாய்ப்பும் உள்ளது. இது தவறான முன்னுதாரணமாகிவிடும்.

### கேள்விக்குறியாகும் சமூக நீதி

பொதுத் தேர்வுகளில் வெற்றி பெற்று இட ஒதுக்கீட்டு முறையின் மூலமாக மத்திய பொதுப் பணிகளில் நுழைய வாய்ப்பு பெற்ற பட்டியலின, பழங்குடி, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மாற்றுத் திறனாளிகள் இதில் பாதிக்கப்படுவார்கள் என்பது மிக முக்கியமான விஷயம்.

கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், சென்ற ஆண்டு தேர்வு எழுதி வெற்றிபெற்றதாக சமீபத்தில் முடிவுகள் வெளியாகியுள்ள தேர்வர்களுக்கு இந்த ஏற்பாடு பொருந்தலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. மத்திய பொதுத் தேர்வாணையத்தின் இப்போதைய தரவரிசை அடிப்படையில் ஒதுக்கீடு என்பதை உண்மையிலேயே அரசு செழுமைப்படுத்த வேண்டும் என்று நினைத்தால், தற்போதுள்ள தேர்வு முறையை மேலும் செழுமைப்படுத்தும் ஏற்பாடுகளைத் தேர்வாணையம் மேற்கொள்ள பரிந்துரைக்கலாம்.

அதன் முடிவுகளின் அடிப்படையிலேயே தரவரிசை அமையவும் வேண்டும். கல்வித் துறையின் ஒவ்வொரு அடியிலும் கீழ்நிலைச் சமூகங்களைப் பாதிக்கும் மாற்றங்களை எடுப்பதையே ஒரு அரசு வழக்கமாக மாற்றிக்கொண்டிருப்பது மிக அபாயகரமானது.

நன்றி : தி இந்து - மே 22, 2018

## ஆட்சிப் பணியா? ஆள்வோருக்கான சேவையா?

மத்திய அரசுப் பணியில் இருக்கும் நண்பர் ஒருவர் "திறமையான ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குப் பஞ்சமா என்ன?" என்ற கேள்வியுடன், மத்திய அரசில் பத்து அமைச்சகங்களில் இணைச் செயலாளர் தகுதியுள்ள பத்து பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்று ஜூன் - 10 அன்று வெளியிடப்பட்டிருந்த விளம்பரத்தை எனக்கு மின்னஞ்சலில் அனுப்பியிருந்தார். மிகுந்த அதிர்ச்சியுடன்தான் அதைப் பார்த்தேன்.

1. வருவாய் 2. நிதிச்சேவைகள் 3. பொருளாதார விவகாரங்கள் 4. வேளாண், கூட்டுறவு & விவசாயிகள் நலன் 5. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைகள் 6. கப்பல் 7. சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் 8. புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 9. விமானப் போக்குவரத்து 10. வணிகவியல். ஆகிய இந்த அமைச்சகங்களில் இணைச் செயலாளர் தகுதியில் இவர்கள் நேரடியாக நியமனம் செய்யப்படுவார்கள் என்று அந்த விளம்பரம் தெரிவித்தது.

### பின்னணி என்ன?

இதன் அடிப்படை நோக்கமே தனக்கு வேண்டியவர்களை, தனது விருப்பங்களை நிறைவேற்றத் தயாராக உள்ளவர்களை நியமிப்பது என்பதைத் தவிர வேறெந்த விளக்கத்தையும் நம்மால் தர இயலாது. ஏனெனில், நாடு முழுவதிலும் உள்ள சுமார் 5,000 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளில் தற்போது சுமார் 500 பேராவது இணைச் செயலாளர் தகுதியில் பல்வேறு துறைகளில் பணியாற்றிவரும் நிலையில், மேலே குறிப்பிட்ட பதவிகளுக்குத் தேவையான கல்வித் தகுதியைக் கொண்ட, அனுபவம் மிக்க அதிகாரிகளை இனம் கண்டுபிடிப்பது இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி நிலையில் ஒரு விஷயமே இல்லை.

இந்த விளம்பரத்தை வெளியிட்டுள்ள பணியாளர் மற்றும் பயிற்சித் துறையிடம்தான் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் குறித்த அனைத்துத் தகுதி விவரங்களும் உள்ளன. அதன் அடிப்படையில் தேவையான கல்வியும் அனுபவமும் கொண்ட அதிகாரிகளைத் 'தேடும் முயற்சி'க்குச் சில மணி நேரம்கூட ஆகாது. இந்த 10 இடங்களுக்காக 100 பேரைக் கொண்ட ஒரு பட்டியலை உருவாக்கி, அதிலிருந்து மிகச் சிறந்த 10 பேரைத் தேர்ந்தெடுக்கும் திறன் இந்தத் துறைக்கு இல்லாமல் போய்விட்டதா? ஏன் வெளியிலிருந்து ஆட்களைத் தேடுகிறார்கள்?

## மேற்கு வங்க அனுபவம்

நான் பணியாற்றிய மேற்கு வங்க மாநில அரசில் பல்வேறு மாவட்டங்களுக்குத் தேவையான ஆட்சியர், கூடுதல் ஆட்சியர், காவல் கண்காணிப் பாளர், கூடுதல் கண்காணிப்பாளர், பல்வேறு துறைகளுக்கான இணைச் செயலர், துணைச் செயலர் போன்ற பதவிகளுக்கு அதி காரிகளைத் தேர்வுசெய்து பட்டியல் தயாரித்து, நியமன உத்தரவுகளை வெளியிடக் குறைந்தது ஆறு மாத காலம் ஆகும் என்ற நிலை நிலவிவந்தது.1990-களின் இறுதியில் மத்திய அரசு பணியிலிருந்து மீண்டும் மாநிலப் பணிக்கு வந்த என்.கே.ரகுபதி உள்துறைச் செயலாள ராக நியமிக்கப்பட்டபோது, அப்போதுதான் தலையெடுத்துவந்த கணினி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்தப் பதவிகளுக்கான நியமனம் தொடர்பான கோப்பை ஒரே நாளில் இறுதிசெய்தார். அன்று மாலையே நியமன உத்தரவு அனுப்பி வைக்கப்படும் நிலை அங்கு உருவானதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

எனவே, உண்மையிலேயே மத்திய அரசுக்கு இந்த நியமனங்களில் உள்நோக்கம் ஏதுமில்லை எனில், இன்று மேலும் நவீனமாகியுள்ள கணினி தொழில் நுட்பத் தைப் பயன்படுத்தி, மத்திய - மாநில அரசுப் பணிகளில் 15-20 ஆண்டுகள் பணியாற்றி அனுபவம் பெற்ற இ.ஆ.ப. அதிகாரிகளை, அந்தந்த துறைகளுக்கான கல்வி, அனுபவம் பெற்ற அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையினால் எளிதாகக் கண்டறிய முடியும் என்பதே உண்மை நிலவரம்.

## அபாயகரமான முடிவு

இந்த விஷயத்தில் உள்ள மிக முக்கியமான அபாயம் என்னவென்றால், அமைப்பைப் பற்றி எந்த அறிதலும் இல்லாதவர்கள் உள்ளே நுழைக்கப் படுவதால் உண்டாகவல்ல சேதம்.

ஆட்சிக்கு வரும் எந்த ஆட்சியாளர்க்கும் அரசின் அமைப்பில் உள்ள சாத்தியங்கள் - பிரச்சினைகள் - சவால்களை விளக்கும் இடத்தில் இருப்பவர்களே இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள்தான். இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படும் தேர்வானது நாட்டில் நடத்தப்படும் முதன்மையான தேர்வுகளில் ஒன்று. மருத்துவம், பொறியியல் என்று பல்வேறு துறைகளிலிருந்தும் போட்டியிடும் சிறந்த மூளைகளைக் கண்டறிவதோடு அவர்களுக்கு இந்திய அமைப்பை முழுக்க அறிமுகப்படுத்தி, முழுப் பயிற்சி அளித்து, பின்னர் அவர்களுடைய தொடர் அனுபவங்களின் அடிப்படையிலேயே செயலர் பதவி நோக்கி அவர்கள் இப்போது உயர்த்தப் படுகிறார்கள்.

அரசியல்வாதிகள் ஓட்டுக்காக நடைமுறைச் சிக்கல்களோ, அபாயங்களோ தெரியாமல் கொடுக்கும் பல வாக்குறுதிகள் அல்லது அவர்கள் நினைத்த மாத்திரத்தில் செயலாக்க முற்படும் விஷயங்களுக்கு அனுபவம் உள்ள அதிகாரிகள் உடன்பட மாட்டார்கள். இப்போது உள்ள அமைப் பில் அதிகாரிகள் சுயாதீனமாகச் செயல்பட கொஞ்சமேனும் இடம் இருக்கிறது. அந்த இடத்தை யும் நாசமாக்கி, தனக்கு விருப்பப்பட்டவர்களைப் பதவியில் வைத்து, நினைத்த மாத்திரத்தில் காரியங்களைச் சாதிக்கவே மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் புதிய ஏற்பாடு வழிவகுக்கும். லட்சக்கணக்கான மக்கள் மத்தியில், பல்வேறு இக்கட்டான சூழல்களில் பணியாற்றி செயலர் பதவியை நோக்கி வந்தடையும் ஒரு அதிகாரிக்கு இணையான அனுபவம் ஒருபோதும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றிவிட்டு வருவோருக்கு வராது.

மேலும், ஏற்கெனவே மாநில ஒதுக்கீட்டில் தலையிட்டு, அதிகாரிகளிடையே போட்டி மனப்பான்மைக்கு விதை போட மத்திய அரசு முயற்சித்துவரும் நிலையில், இந்த நேரடி நியமன உத்தரவானது அரசின் முதுகெலும்பை பலவீனப் படுத்தி, ஆட்சிக்கு வரும் எவருக்கும் குனிந்து கொண்டே இருக்கும் ஒரு பிரிவினரை உருவாக்கி விடும். படிப்படியாக இந்திய ஆட்சிப் பணி அமைப்பையே இது சீர்குலைத்துவிடும்!

- **வீ.பா.கணேசன்,**
எழுத்தாளர், மேற்கு வங்க அரசில் 25 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்.

*நன்றி: தி இந்து - ஜூன் 13, 2018*

# பாராட்டுகிறோம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய மேலாளர் தோழர் வெங்கடேசன் மகன் வி.அரவிந்த் 2017-2018ஆம் ஆண்டில் நடைபெற்ற பிளஸ் 2 தேர்வில் 1147 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அதில் தமிழ் - 186, ஆங்கிலம் - 187, பொருளாதாரம் - 189, காமர்ஸ் - 198, கணக்கியல் - 197, வணிக கணக்கில் - 190 என மதிப்பெண்கள் எடுத்துள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் பாராட்டுவதோடு, இதுபோல் மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துகிறோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

நாள் : 1.7.2018

# மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை 2018 ஜூலை மாதம் 21. 22 தேதிகளில் கோபால்சாரி திருமண மண்டபம், மதுரை என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

பொருள்கள்:

**21.7.2018**

★ கொடியேற்றம் ★ தியாகிகளுக்கு அஞ்சலி

**பொது அமர்வு**

★ தலைமையுரை ★ வரவேற்புரை

★ துவக்கவுரை ★ வாழ்த்துரை

★ பொதுச் செயலாளர் அறிக்கை - வேலை அறிக்கை - நிதிநிலை அறிக்கை

★ விவாதம்

★ தீர்மானங்கள் முன்மொழிதல்

**22.1.2018**

★ விவாதங்களுக்கு பதிலுரை

★ சிறப்புரை

★ நிறைவுரை

★ 12ஆம் மாநில மாநாட்டிற்கு பிறகு நாளது வரை பணி ஓய்வு பெற்ற முன்னாள் மாநில நிர்வாகிகளுக்கு பாராட்டு நிகழ்வு

★ கருத்தரங்கம்

★ நன்றியுரை

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,

(மு.அன்பரசு)
பொதுச் செயலாளர்

பெறுநர்
மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்

# ஜாக்டோ-ஜியோ சார்பில் சென்னையில் நடைபெற்ற காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம்

புதிய ஓய்வு ஊதியத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வு ஊதியத்தை கொண்டு வர வேண்டும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும், 21 மாத கால ஊதிய மாற்ற நிலுவைத் தொகையினை வழங்க வேண்டும், அரசாணை எண். 56, 100 மற்றும் 100-ன்படி ஆட்குறைப்பு நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 11.6.2018 அன்று அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ சார்பில் சென்னையில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

முதல் நாள் நடைபெற்ற போராட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்கள் க.மீனாட்சிசுந்தரம், மு.சுப்பிரமணியன், கு.தியாகராஜன் ஆகியோர் தலைமையில் அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க நிறுவனத் தலைவர் ஆ.மாயவன், ச.மோசஸ் (தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி), கு.வெங்கடேசன் (தலைமைச் செயலகம்), செ.முத்துசாமி (தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி), கே.பி.ஓ.சுரேஷ் (தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்), ஆர்.தாமோதரன் (தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் சங்கம்) உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள், ஆசிரியர்கள் என 250 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் 2ஆவது நாள் போராட்டத்தின் போது 6க்கு மேற்பட்ட தோழர்கள் உண்ணாவிரதப் பந்தலிலேயே மயங்கி விழுந்தனர். அவர்கள் இருவரும் சென்னை கோஷா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

## அரசியல் கட்சிகள் ஆதரவு

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், காங்கிரஸ் கட்சியின் எச்.வசந்தகுமார், சட்டமன்ற உறுப்பினர் ராமசாமி, பாமக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.மூர்த்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிறுவனத்தலைவர் டி.டி.வி.தினகரன், மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளன பொதுச் செயலாளர் உள்ளிட்ட பலர் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

## முதல்வரை சந்திக்க பேரணியாக சென்ற ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் கைது

3ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நீடித்து வந்த நிலையிலும், 6-க்கும் மேற்பட்ட தலைவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின்புலத்திலும், அரசு தரப்பில் இருந்து யாரும் பேச்சுவார்த்தைக்கு அழைக்காத காரணத்தினால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முதல்வரை சந்திக்க பேரணியாக தலைமைச் செயலகம் நோக்கி புறப்பட்டனர். காவல் துறையினரின் தடையை மீறி ஊர்வலமாகச் சென்றவர்களை நேப்பியர் பாலம் அருகே காவல் துறையினர் தடுத்தனர். இதையடுத்து அவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். சாலை மறியலில் ஈடுபட்டவர்களை காவல் துறையினர் குண்டுக் கட்டாக தூக்கிச் சென்று கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் எங்களை முதல்வரிடம் அழைத்து செல்லுங்கள் அல்லது எங்களை ரிமாண்ட் செய்யுங்கள் என்று வலியுறுத்தி வந்த நிலையில் ரிமாண்ட் செய்ய மறுத்த பின்புலத்தில் காலவரையற்ற உண்ணாவிரதத்தை தற்காலிகமாக ஒத்தி வைப்பதெனவும், மீண்டும் ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக் குழு கூடி அடுத்தகட்ட போராட்டத்தை தீர்மானிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

## மாவட்டங்களில் நடைபெற்ற போராட்டம்

### நாகப்பட்டினம்

11.06.18 அன்று ஜாக்டோ - ஜியோ உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் சென்னையில் உண்ணாவிரதம் மேற்கொள்வதை முன்னிட்டு அதே நாட்களில் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மாலை நேர ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற முடிவின்படி நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் மாலைநேர ஆர்ப்பாட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.ட்டீ.அன்பழகன், பா.ரவி, சி.சரவணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் எல்.பிரேம்சந்திரன், ஊரக வளர்ச்சித் துறையின்

எம்.அரிகிருஷ்ணன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் எம்.சாந்தி, வருவாய் கிராம உதவியாளர் சங்கத்தின் மோகன், முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் எஸ்.செங்குட்டுவன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பார்த்தசாரதி, பட்டதாரி ஆசிரியர் கழக கூட்டணியின் மகேஷ், தமிழக ஆசிரியர் கூட்டணியின் கணேசன் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சேவியர் செல்வகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் எம்.காந்தி நிறைவுரையாற்றினார். ஆர்.கலா நன்றி கூறினார்.

போராட்டத்தை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து ஆதரவுகோரி வருவதன் ஒருபகுதியாக 09.06.18 அன்று நாகை தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எம்.தமீமுன் அன்சாரி அவர்களை ஜாக்டோ - ஜியோ உயர் மட்டக்குழு உறுப்பினர் ப.அந்துவன் சேரல் தலைமையில் சந்தித்து ஆதரவு கோரினர். ❖

# ஆதிசேஷய்யா குழுவை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**79** லட்சம் பேர் தமிழகத்தின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து



வேலைவாய்ப்பிற்காக காத்திருக்கும் சூழ்நிலையில் ஏற்கனவே உள்ள பணியிடங்களையும் குறைக்கும்விதமாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசு ஆணை எண் 56-ன்படி ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் ஆதிசேஷய்யா மற்றும் சித்திக் ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்டுள் குழுவை கலைக்க வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில முடிவின்படி 05.06.18 நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம், சீர்காழி, தரங்கம்பாடி, குத்தாலம் மற்றும் மயிலாடுதுறை வட்டாட்சியரகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகை வட்டாட்சியரகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் விளக்கவுரையாற்றி னார். வருவாய்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கத் தலைவர் வி.பாலசுப்பிரமணியன், அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

# உரக்கச்சொன்னார் ஒரு தோழி

பிற்பகலில் பரபரத்தது அலுவலகம்.
அலுவலக உதவியாளர் நீட்டிய
சுற்றறிக்கையைப் படிக்காமலேயே
தொகையெழுதி கையெழுத்திட்டனர்.
அவரவரே குழுக்களாக பிரிந்தனர்.
குழுவிவாதம் முறைப்படி நடந்தது.
வேலைப் பிரிவினையும் முடிவானது.

நிதிக்குழுவிற்கு கணக்கரே தலைவரானார்.
எந்தெந்த கடைகளில்
என்னென்ன வாங்குவதென்று
கொள்முதல் குழு குறித்துக்கொண்டது.
அலுவலக வாகனம் தவிர்த்து
அவரவர் வாகனமே பயன்படுத்த
பணியமைப்புப் பிரிவு எழுத்தர்
விதிமுறை சொன்னார் வழக்கம்போல்.

பதவிக்கேற்ப நாற்காலி,நீளபெஞ்சை
இடவசதிக்குழு இறுதிப்படுத்தியது.

சந்தனமாலை,நினைவுப்பரிசு,
பொன்னாடை,இனிப்பு காரம்
மேசையை அலங்கரிக்க
சார்நிலை அலுவலர் அழைத்துவர
வந்தமர்ந்தார் அலுவலகத்தலைவர்.

பணிமாறுதல் வழியனுப்பு விழா....!

இதற்கிடையில்.....
உரக்கச்சொன்னார் ஒரு தோழி....
'இன்றுமாலை அலுவலகம் எதிரில்
கோரிக்கை வலியுறுத்தி
கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டமென்று.'

- **ஆர்.நடராஜன்.**

# ஆன்லையில் கருவூலத் துறை அனைத்துத் துறைகளிலும் காணாமல் போகும் பணியிடங்கள்

கடந்த இரண்டு ஆண்டுகளாக பட்ஜெட் கூட்டத் தொடரில் கருவூலக் கணக்குத் துறையை மின்மயப்படுத்தும் கொள்கை குறிப்புகள் வெளியிடப்பட்டு இந்த ஆண்டு 238 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1990-களில் முதன்முறையாக கணினிமயமாக் கப்பட்ட துறை கருவூலக் கணக்குத் துறையாகும். தற்சமயம் IFHRMS என்ற திட்டத்தின் அடிப்படையில் முழுவதுமாக காகிதம் இல்லாத கையாளுதல் முறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு புதியதாக அனைத்து கணினிகளுடன் மாற்றம் செய்யப்பட்டு ACER எனும் புதிய கணினி வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு புதியதாக திரும்பவும் அதே ACER கணினி வழங்கப்பட்டது. தற்சமயம் வழங்கப்பட்ட கணினி கருவூலத்தின் சொத்துக்கள் அல்ல. அவை அனைத்தும் விப்ரோ நிறுவனத்தின் சொத்துகளாக மாறிவிட்டது. கருவூல கணக்குத் துறை விப்ரோ நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்ட நிலையில் உள்ளது.

முன்னர் வழங்கப்பட்ட கணினிமயப்படுத்து வதற்கு ஏதுவாக ரேடியேஷன் குறைவாக இருந்தது. ஆனால், தற்போது வழங்கப்பட்டுள்ள கணினியில் ரேடியேஷன் அதிகமாகவும், மானிடரின் ரெஷல்யூஷன் குறைவாகவும் உள்ளதால் அதிக வெப்பம் மற்றும் ஒளி வெளிப்பாடு அதிகமாக உள்ளதால் கண் பாதிப்பும் உடல் பாதிப்பும் அதிகமாக உள்ளது. முன்னர் வழங்கப்பட்ட கணினிகள் அனைத்தும் E-waste என்ற முறையில் அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

கருவூலத் துறை ஆன்லைனில் மாற்றம் செய்யும் பொழுது அனைத்து துறை சார்ந்த ஊழியர்கள் யாரும் கருவூலம் வரவேண்டிய அவசியம் இல்லை. துறையில் மூன்று நிலைகளில் பட்டியல் ஒப்பளிப்பு செய்து, கடைசி நிலையில் பட்டியல் ஒப்பளிப்பு செய்தால் அந்த பைல் கருவூலத்தின் பகுதிக்கு சென்றவுடன் அதற்குண்டான டோக்கன் அவர்களுடைய கணினியில் தெரிவித்துவிடும். அதன்பின்பு பட்டியல் கருவூலத்தில் ப்ராசஸ் செய்து, சரியாக இருந்தால் காசாக்கமும், தவறாக இருந்தால் தணிக்கை செய்யப்படும்.

இந்நிலையில் அரசு ஊழியர்கள் அனைவரின் பணிப்பதிவேடுகளும் IFHRMS திட்டத்தில் ஆன்லைன் முறையில் மின்மயப்படுத்தப்பட்டு வருகிறது.

பணிப்பதிவேடு என்பது நிர்வாகப் பிரிவில் பராமரிக்கப்படும் பதிவேடு ஆகும். விதிகளின்படி ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தனியார் பணிப் பதிவேட்டை பெற்று பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என பார்வையிட முடியும். ஊழியர் தன்மையை பணிப்பதிவேட்டின் நகலைக்கூட பராமரிக்க முடியும். ஒருவேளை இளையவர், முதியவர் முரண்பாடு வரும் பொழுதுதான் இரண்டு நபர்களுடைய பணிப் பதிவேடு ஒப்பிட்டு சரி செய்யப்படும். ஆனால், அண்மையில் பதிவேற்றம் செய்யப்பட்ட பின் யாருடைய பணிப்பதிவேட்டையும் யார் வேண்டு மானாலும் பார்க்கலாம் என்ற வெளிப்படைத் தன்மை உள்ளதாக கூறப்படுகிறது. இது தனிப்பட்ட ஒருவருடைய விவரங்கள் வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. இது தனி மனித உரிமை மீறலாகும். பெரும்பாலும் பெண்கள் பணி செய்யும் நிலையாக உள்ள நிலையில், விசாகா கமிட்டி மாவட்டங்களில் அமைக்காத நிலையிலும், ஒருவரின் தனிப்பட்ட விவரங்கள் மனகிறுக்கன் ஒருவன் கையாளும் நிலை ஏற்பட்டால் எவ்வளவு பாதகங்கள் ஏற்படும்.

மற்ற துறைகளில் இதை நடைமுறைப்படுத்த உரிய கணினி, பிரிண்டர், இணைய இணைப்பு மற்றும் ஸ்கேனர் தேவை. ஆனால், இது ஏதும் இல்லாத அலுவலகங்களாக பெரும்பகுதி அலுவலகங்கள் உள்ள நிலையில், அடிப்படை கட்டமைப்பை ஏற்படுத்தப்படாமல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் துறை அலுவலர்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி கணினித் துறையை பயன்படுத்தி பட்டியல் பெற முடியாது என அச்சுறுத்தி மனவேதனையுடன் பணம் பெறும் உரிமையை தடை செய்கின்றார்கள். இதனால், கருவூல ஊழியர்களுக்கும், துறை ஊழியர்களுக்கும் இடையே உரசல்களை ஏற்படுகிறது.

டேப்லாய்ட் மற்றும் பணிப் பதிவேடு டிஜிட்டலைசேஷன் முடிந்து இன்று 2 அல்லது 3 ஸ்பேஸ் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக் கின்ற நிலையில் 10% பணம் பெறும் அலுவலர் களுக்கு நான்கு நாட்கள் பயிற்சி அளித்துவிட்டு அனைவரையும் நடைமுறை செய்யச் சொல்வது நியாயமும் இல்லை, நடைமுறை சாத்தியமும் இல்லாத விசயம் ஆகும்.

இந்த பயிற்சியை வழங்க உரிய தொகையை அரசிடம் இருந்தோ அல்லது இதை செயல்படுத்தும் விப்ரோ நிறுவனத்திடமிருந்தோ முன்பணமாக பெற்று வழங்காமல் கருவூல அலுவலர்களை பிச்சை எடுக்கும் பாத்திரங்களாக மாற்றி விட்டனர்.

இத்திட்டம் முழுமையாக செயல்முறைக்கு வருமானால் அனைத்து அலுவலகங்களிலும் உள்ள அனைத்து நிர்வாகப் பணியிடங்களும் அழித்தொழிக் கப்படும் நிலை ஏற்படும். வருகைப் பதிவேடு ஒழிக்கப்படும். பட்டியல் போடும் துறையின் உரிமை பறிக்கப்படும். மேன் ஆன் டூட்டி வழங்கிய பின்னர் சம்பளம் கருவூலம் மூலம் வழங்க வழிவகை செய்யப்படும். பின்பு, அது எப்படி ஓய்வூதியர் களுக்கு ஓய்வூதியதாக வழங்கப்படுகின்றதோ அதேபோல் கருவூலம் என்கின்ற ஒன்று இருந்தால் அதன் மூலமாகவோ அல்லது அரசு யாரை சொல்கிறதோ அந்த மூன்றாம் ஏஜென்சி மூல மாகவோ வழங்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

14 லட்சம் அரசு ஊழியர்-ஆசிரியர் பணியிடங்கள் உள்ள நிலையில், அதை ஆயிரங்களிலும் அல்லது சில லட்சங்களாக மாற்றும் நடைமுறையை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் அரசு ஊழியர் - ஆசிரியர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. படித்துவிட்டு அரசு பணிக்காக காத்திருக்கும் மாணவர்களின் வாழ்க்கையிலும், எதிர்காலத்திலும் மண்ணள்ளிப் போடும் வேலையை அரசாங்கம் செய்ய முனைந்திருக்கின்றது. ❖

# கருப்பு பூதம்

எல்லையில்
வரும்
தொல்லையிலிருந்து
இந்தியா
விடுபட
உள்ளூர் வளர்ச்சியை
உயர்த்தி
உலகுக்கே
வழிகாட்டிட
கறுப்புத் திமிங்கிலத்தை
அயல்நாடு போகாமல்
இந்தியப் பெருங்கடலில்
கட்டிப் போட்டிட
நாங்கள் கண்ட
புதிய மந்திரம்
“பணமதிப்புழப்பு”.

நாங்கள் வெற்றிப் புன்னகையில்
சௌந்தமாய்
இருந்த வேளையில்
கருப்புப்பூதம்
50 சதவீதம்
வளர்ந்திருக்கிறதென்று
அறிவிப்பு செய்கிறார்
அமைச்சர்...
அப்பவே எங்க
பாட்டி சொன்னா...
டே அது கருப்புடன்
விடாது
கருப்புடா...
என்று
யாரு கேட்டா...

எதையோ
பிடிப்பதாய்
சொல்லி
எதையும்
பிடிக்கவில்லை
என்ற
இழிசொல்
ஏந்தி நிற்கும்
இந்தியர்களாய் நாம்...

வளருது கருப்பு வானத்திற்கும் பூமிக்கும்
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாய்
அடியையும்
நுனியையும்
அறிய மறுக்கும்
அறிவுலகம்

- **முனைவர் மதுரை சுகி**

# உழைக்கும் வர்க்க இயக்கங்களுக்கு இன்றைய நாளில் சவால்கள்

ஏ.கே.பத்மநாபன்,
துணைத் தலைவர், சிஐடியு

தற்போதைய சூழ்நிலையில் உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்கள் கடும் சவால்களை சந்தித்து வருகின்றனர். ஒட்டுமொத்தமாக உழைக்கும் வர்க்கத்திற்கு இந்த சவால்கள் புதியவை என்பதல்ல. ஆனால், இன்று 21ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டின் முடிவில், கடந்த நூற்றாண்டில் பெற்ற அத்தனை வெற்றிகளும் ஆளும் வர்க்கங்களின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் சூழ்நிலையை எதிர்கொள்கிறோம்.

புதிய தாராளமய, பொருளாதார கொள்கைகள் முதலாளித்துவ முறையின் நெருக்கடிகளை மேலும் தீவிரமாக்கியுள்ளது. கடும் நெருக்கடியின் அத்தனை சுமைகளையும் உழைக்கும் மக்களின் தோள்களுக்கு மாற்றுவதன் மூலம், நிலைத்திருக்க வைக்க முடியாத முதலாளித்துவ ஒழுங்கை வலுப்படுத்தும் முயற்சிகள் தொடர்கின்றன. வெறி பிடித்த தொழிலாளர் விரோத தலைவர்களும், அவர்களின் அரசியல் கட்சிகளும் இந்த முயற்சிகளை மூடி மறைக்க முயற்சித்து, தொழிலாளர்களை வென்றெடுக்க முனைவதை நாம் பார்க்கின்றோம். மக்களால் சந்திக்கப்படும் அத்தனை பிரச்னை களுக்கும் சர்வரோக நிவாரணியாக உலகமயத்தை முன்வைப்பதாக தொடங்கிய செயல், முக்கிய பாத்திரங்களின் தற்காப்பிற்கான எதிர் நடவடிக்கை யாக மாறியுள்ளது.

அவர்கள் எதிர்கொண்ட அனைத்து பிரச்னைகளும் தீவிரமாகி, உழைக்கும் மக்களுக்கு சூழ்நிலை நெருக்கடியானதாக இருக்கிறது. வளர்ந்த, வளர்முக, வளரத் தொடங்கும் நாடுகள் என்று எதுவும் இந்த அதிகரித்து வரும் நெருக்கடிக்கு இலக்காக இல்லை, குறைந்தபட்சம் வளர்ந்த நாடுகள் விலக்காக இல்லை.

பிரச்னைகளும் ஒத்த தன்மையுடனேயே இருக்கின்றன. வேலையின்மை, தகுதிக்கு குறைவான வேலை வாய்ப்பு, உண்மை ஊதியம் குறைபடுதல், சமூக பாதுகாப்பு மீது தாக்குதல், கல்வி, சுகாதாரம் மற்றும் இதர நலன் சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றிலிருந்து அரசாங்கம் பெருமளவில் விலகுதல், உழைக்கும் மக்கள் மீதான முழுமையான தாக்குதலாக இது மாறியுள்ளது. 2007-08-ல் வெடித்த இந்த நெருக்கடியிலிருந்து மீள்வது என்பது வார்த்தைகளில் மட்டுமே இருக்கிறது.

இத்தகைய சூழ்நிலைகளில் நீதி கோரி உழைக்கும் மக்கள் வீதியில் போராடுகின்றனர். உழைக்கும் மக்களுக்கு எதிரான தாக்குதலை பின்னுக்கு தள்ளக்கூடிய நிலையை இந்தப் போராட்டங்கள் இன்னும் அடையவில்லை என்பதும் உண்மை. கடந்த இருபது ஆண்டுகளாக கீழிறக்கப்பட்டு வரும் சராசரி உண்மை ஊதியம் இன்னும் 1970 மட்டத்திற்கு கீழாகவே இருக்கிறது என்னும் அளவுக்கு வளர்ந்த நாடுகளில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா சூழ்நிலை இருக்கிறது. ஐரோப்பாவில் இதர நாடுகளில் சூழ்நிலை வேறுபட்டு இருக்கவில்லை.

## இந்திய நிலைமை

1991-ல் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் தொடங்கிய புதிய தாராளமய தாக்குதல் நரேந்திர மோடியின் ஆட்சியின்கீழ் இன்னும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மோடி ஆட்சியின் கடந்த நான்காண்டு கால, உழைக்கும் மக்கள் மீது தீவிரப்படுத்தப்பட்ட தாக்குதலுக்கு சாட்சியாக இருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற ஒரே இந்திய தொழிலாளர் மாநாட்டில் பிரதமரால் முன்வைக்கப்பட்ட 'சிரமேவ ஜெயகே' போன்ற போலியான முழக்கங்கள் அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத கொள்கைகளை மூடி மறைக்கும் முகமூடியாகவே இருந்தது.

தொழிற்சங்க உரிமைகளுக்கு எதிரான தாக்குதல், குறைவான ஊதியம், குறைவான சமூக பாதுகாப்பு, வரையறுக்கப்பட்ட பணி பாதுகாப்பு ஆகியவை தொடர்கின்றன. கிட்டத்தட்ட எல்லா தொழிலாளர் சட்டங்களும் திருத்தப்பட்டுள்ளன அல்லது திருத்தப்படும் செய்முறையில் உள்ளன. இவை அனைத்தும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் நலன்களுக்கு எதிரானவை என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இவை அனைத்தும் எளிதாக தொழில் செய்தல் என்ற பெயரில் செய்யப்படுகின்றன.

நிர்ணயிக்கப்பட்ட கால வேலை வாய்ப்பு என்பது பணி பாதுகாப்பு மீதான அண்மைக்கால தாக்குதல் தொழிற் சங்கங்கள் மற்றும் இடதுசாரி கட்சிகளின் ஒன்றுபட்ட எதிர்ப்பு காரணமாக ஐக்கிய முன்னணி அரசால் கைவிடப்பட்ட வாஜ்பாய் அரசாங்கத்தின் முன்மொழிவை அரசாங்கம் மீண்டும் கொண்டு வந்துள்ளது.

வேலை வாய்ப்பு உருவாக்கம், விவசாயிகளுக்கு ஆதரவு, தொழில் வளர்ச்சி, அந்நிய நாடுகளில் பதுங்கியுள்ள கருப்புப் பணத்தை கொண்டு வருதல் ஆகிய தேர்தலுக்கு முந்தைய உறுதிமொழிகள் எல்லாம் ஜீம்லா (சும்மா தேர்தல் பேச்சு)வாக நிரூபிக்கப்பட்டுள்ளன. புதிய தாராளமயம் மற்றும்

அரசியல்வாதி பெரு நிறுவன தொடர்பு ஆகிய கொள்கைகளால் உருவாக்கப்பட்ட நிதித்துறை நெருக்கடி, இதுவரை இல்லாத சூழ்நிலையை உண்டாக்கியுள்ளது. அதிகாரத்தில் உள்ளவர்களின் அனுமதியோடு, பொதுமக்கள் பணத்தை கொள்ளையிட்டதை அண்மைக்கால நிகழ்வுகள் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளன.

முந்தைய ஆட்சிகளால் தொடங்கப்பட்ட கொள்கைகளின் தொடர்ச்சியாகவே கிட்டத்தட்ட இந்த அனைத்து கொள்கைகளும் இருக்க, மோடியின் ஒரே கொள்கையான 'செல்லாப் பண நடவடிக்கை' நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீது எப்போதும் நீடிக்கக்கூடிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. இந்த பிரிவினர்தான் அதிகபட்ச வேலை வாய்ப்புகளை வழங்குகின்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## சமூக பாதுகாப்பு மீது தாக்குதல்

2004 முதல் அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பலன்களை விலக்கிக் கொண்டது, சமூக பாதுகாப்பு மீதான கடும் தாக்குதல்களின் தொடக்கமாக இருந்தது. தொழிலாளர் நல நிதி மற்றும் தொழிலாளர் அரசாங்க காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை தகர்க்க தற்போது கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுதந்திர இந்தியாவில் சமூக பாதுகாப்பில் ஆகச்சிறந்த சாதனைகளாவது நமது ஆட்சியாளர்களால் காட்சிப்படுத்தப்பட்டவை இந்த இரு திட்டங்களும்.

தொழிலாளர் நல நிதியில் முதலாளிகளின் பங்களிப்பை குறைத்தல், தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு மாறுவதற்கான விருப்பத் தேர்வு, தொழிலாளர் நல நிதியில் பெண் தொழிலாளர்கள் பங்களிப்பை குறைத்தல், தொழிலாளர் அரசாங்க காப்பீட்டுத் திட்டத்தை காப்பீட்டுத் துறை கணக்குகளாக மாற்றுதல் போன்ற அண்மைக்கால முயற்சிகள் அரசாங்கத்தின் நோக்கங்களை தெளிவாக்குகின்றன. இவை அனைத்தும் தொழிலாளர்களால் எதிர்க்கப் படுகின்றன; போராட்டங்கள் தொடர்கின்றன.

## வித்தியாசமான எதிர்ப்பு

நாட்டில் உள்ள தொழிற்சங்க இயக்கங் களிடமிருந்து மிக வலிமையான, ஒன்றுபட்ட எதிர்ப்பை இந்திய ஆளும் வர்க்கம் சந்தித்துள்ளது என்பது முக்கியமாக குறித்துக் கொள்ள வேண்டிய ஒன்று. புதிய தாராளமய தாக்குதல்களுக்கு எதிராக தேசிய ரீதியாகவும், துறை ரீதியாகவும், ஒன்றுபட்ட இயக்கங்கள், போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் நவம்பர் 1991 முதல் நடைபெற்று வருகின்றன. இரண்டு தேசந் தழுவிய வேலை நிறுத்தங்களையும், எண்ணற்ற பகுதிவாரியான வேலை நிறுத்தங்களையும் இன்றைய அரசாங்கம் பார்த்துள்ளது. இந்த ஒன்றுபட்ட இயக்கத்தில் எந்த பகுதியும் விலக்காக இல்லை. இவற்றில் மாநிலங்களிலும், மத்திய அரசிலும் உள்ள அரசு ஊழியர்கள் முக்கிய பங்களிப்பு செலுத்தியுள்ளனர்.

தனது தனியார்மய முயற்சிகளை அரசாங்கம் முனைப்பாய் செய்து வரும் நிலையிலும், அந்நிய நேரடி மூலதனத்திற்கு கண்மூடித்தனமா அனுமதி அளித்து வரும் நிலையிலும், பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் மற்றவர்களின் போராட்டங் களும் தீவிரப்பட்டு வருகின்றன.

தலைநகர் டெல்லி நவம்பர் 2017-ல் எல்லா பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் ஆகப்பெரிய அணிதிரட்டலை சந்தித்தது. எல்லா தொழிலாளர்களும் தேசம் தழுவிய காலவரையற்ற வேலை நிறுத்தம் நடத்த தயாராவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்புமிக்க காலவரையறையற்ற தேசம் தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு ஆயத்தம் ஆகும்போது, பல நாட்கள் வேலை நிறுத்தம் மற்றம் இதர நடவடிக்கைகள் நடைபெறவும் வாய்ப்புகள் உள்ளன.

பல்வேறு முனைகளிலிருந்தும் ஆளும் வர்க்கங் கள் தொடுக்கும் தாக்குதல்களை எதிர்கொள்ள, உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டு நின்று, நீடித்த போராட்டத்திற்கு ஆயத்தமாக வேண்டும்.

பல்வேறு மாநிலங்களிலும், தேசிய அளவிலும் நாட்டில் உள்ள விவசாய வர்க்கம் அண்மைக் காலமாக போராடி வருவது உற்சாகமாக இருக்கிறது. நாடு முழுவதிலும் மாணவர்களும், இளைஞர்களும் போராடி வருகின்றனர். பல சமூக அமைப்புகளும் வீதிக்கு வந்து, வர்க்கம் மற்றும் மக்கள் திரண் அமைப்புகளோடு கரம் கோர்க்கின்றன. உழைக்கும் மக்கள் திரளின் இந்த ஒற்றுமை வலுப்படுத்தப்பட்டு, நீடித்த போராட்டத்திற்கு தயார்படுத்தப்பட வேண்டும். மாற்று மக்கள் ஆதரவு கொள்கைக்கான போராட்டமாக இந்த போராட்டங்களை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆளும் வர்க்கங்களின் கொள்கைகளையும், இந்த கொள்கைககளுக்கு பின்னுள்ள அரசியலையும் தோலுரித்துக் காட்ட தொடர்ந்த முறையான முயற்சிகள் இதற்கு தேவைப்படும். உருவாக்கப் பட்டுள்ள உந்துதல் நீடித்து நிலைக்க வைக்கப்பட்டு, முன்னோக்கிச் செல்ல முடியும்.

இன்றைய ஆட்சியின்கீழ் தனது பிளவுகர மற்றும் பிற்போக்கு முயற்சிகளை அதிகரித்து வரும் வகுப்புவாதம் மற்றொரு சவால் ஆகும். உழைக்கும் வர்க்கம் மற்றும் இந்த பகுதிகளை ஒன்றுபடுத்த

நமது முயற்சிகள் எடுக்கப்படும்போது, ஒற்றுமையை குலைக்க வகுப்புவாத சக்திகள் முயல்கின்றன. இந்த சக்திகளை தோலுரித்துக் காட்டியும், தனிமைப் படுத்தியும் இந்த சவாலை உழைக்கும் மக்கள் எதிர்கொள்ள வேண்டும். பல்வேறு இதர நடவடிக்கைகளோடு இதற்கு தத்துவார்த்த பிரச்சாரம் அவசியம்.

இந்திய மக்கள் சந்திப்பு முனையில் இருக்கின்றனர். மாற்றான, மக்கள் ஆதரவு கொள்கைகளுக்காக மாபெரும் போராட்டங்களை நடத்த வர்க்க சார்பு அமைப்புகளின்கீழ் உழைக்கும் மக்கள் முன்னணி பாத்திரம் வகிக்க வேண்டும். அத்தகைய நீடித்த போராட்டங்கள் மட்டுமே, இன்றைய சவால்களிலிருந்து நாட்டை காப்பாற்ற முடியும். ❖

# காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க பேரவை அறைகூவல்



மு.சுப்பிரமணியன் எஸ்.ரமேஷ் மா.விஜயபாஸ்கர்

தமிழக அரசு ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளுக்கான அரசாணையை வெளியிட வலியுறுத்தி ஜூலை 3 ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்வது என ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாநில பிரதிநிதித்துவ பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவை கடந்த ஜூன் 22, 23 தேதிகளில் கோவையில் நடைபெற்றது. பேரவைக்கு மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியம் தலைமை வகித்தார். இப்பேரவையில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், ஊராட்சி செயலாளர்களுக்கு பதிவுறு எழுத்தருக்கு இணையான ஊதியம் வழங்க அரசாணை வெளியிட வேண்டும். உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். இரவு நேரங்களில் ஆய்வுக் கூட்டம் நடத்துவதையும் விடுமுறை நாட்களில் களப்பணி ஆய்வு செய்வதையும் நிரந்தரமாக நிறுத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பல மாவட்டங்களில் ஊழியர்களை எவ்வித விளக்கமும் கோராமல் பணியில் இருந்து விடுவிக்கும் நடவடிக்கையை முற்றிலுமாக கைவிட வேண்டும். காலிப் பணியிடங் களை நிரப்ப வேண்டும். அரசாணை 56-ஐ கைவிட வேண்டும். வட்டாரத்திற்கு ஒரு இளநிலை பொறி யாளரை நியமிக்க வேண்டும். சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்கண்ட கோரிக்கைகளுக்காக நடத்தப்பட்ட பல்வேறு கட்டப் போராட்டங்களை தொடர்ந்துஅரசு பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது. ஆனால், ஏற்றுக்கொண்ட கோரிக்கையை இதுவரை அரசாணை வெளியிடப்படாமல் தமிழக அரசு இழுத்தடித்து வருகிறது. ஆகவே, ஏற்றுக் கொண்ட கோரிக்கைகளுக்கான அரசாணை வெளியிடக்கோரி ஜூலை 3 முதல் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் மாநிலம் தழுவிய காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் மாநிலத் தலைவராக மு.சுப்பிர மணியன், பொதுச் செயலாளராக எஸ்.ரமேஷ், பொருளாளராக மா.விஜயபாஸ்கர் மற்றும் மாநில துணை நிர்வாகிகளாக யு.சுமதி, ந.திருவேரங்கன், புஷ்பநாதன், பழனியப்பன், காந்திமதிநாதன், சண்முகசுந்தரம் மற்றும் தணிக்கையாளர்களாக சார்லஸ் சசிக்குமார், ராஜசேகரன் உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மு.அன்பரசு பேரவையை நிறைவு செய்து உரையாற்றினார். சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.முத்துராஜு நன்றி கூறினார்.

முன்னதாக, பணிநிறைவு பெறும் மூத்த மாநில நிர்வாகிகளுக்கு பணி நிறைவு பாராட்டுவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். மாநில துணை தலைவர் ந.திருவேரங்கன் வரவேற்றார். முன்னாள் மாநிலத் தலைவர் கே.எஸ்.வீரபாகு, பொதுச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி, பொருளாளர் வி.நாகராஜன் ஆகியோருக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. ஆர்.முருகேசன் நன்றி கூறினார். ❖

# வறுமையிலிருந்து மக்கள் விடுபட வேண்டும்

சுகுமால் சென்

## வேலை வாய்ப்பை நடுமையத்திற்கு கொணர்தல்

பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்க வேலை வாய்ப்பு இன்றியமையாதது. உண்மையில், வேலை வாய்ப்புகள் மூலம் மட்டுமே வளர்ச்சி நிகழ்கிறது. வறுமையிலிருந்தும், துன்பதுயரங்களிலிருந்தும் நல்ல வாழ்வு முறை மூலம் வெளியேற முயல்கின்றனர். அவர்கள் செய்யும் வேலையில் மேம்படும்போது, வயலிலிருந்து நிறுவனங்களுக்கு நகரும்போது, மேலதிக பயனுள்ள வேலைகள் உருவாக்கப்பட்டு, குறைவான பயனுள்ள வேலைகள் மறையும்போது, பொருளாதாரம் வளர்கிறது. வேறுபட்ட இன மற்றும் சமூக பின்னணியிலிருந்து வரும் மக்களை வேலை வாய்ப்பு இணைத்து, வாய்ப்பு உணர்வை வளர்ப்பதால், சமூகம் செழித்து வளருகிறது. இவ்வாறு வேலை வாய்ப்பு உருமாற்றத் தன்மை கொண்டது. நாம் ஈட்டுவதை, நாம் செய்வதை, இன்னும் சொல்லப் போனால் நாம் யார் என்பதையும்கூட உருமாற்றக் கூடியது.

எல்லா இடத்திலும் எல்லோருக்கும் கொள்கை வகுப்பாளர்களிலிருந்து பொதுமக்கள் வரை, வர்த்தக அதிபர்களிலிருந்து தொழிற்சங்க பிரதிநிதிகள் வரை, செயல்பாட்டாளர்களிலிருந்து கல்வியாளர்கள் வரை வேலை என்பது வளர்ச்சி நிரலின் உச்சியில் இருப்பது ஆச்சரியமில்லை. மிகப்பெரிய மக்கள் பெயர்ச்சி, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள், மக்கள் மற்றும் பணிகளின் உலகளாவிய இடப்பெயர்ச்சி, வேலையின் தன்மையான ஆழமான மாற்றங்கள் ஆகியவை உண்டாக்கும் வேலை வாய்ப்பு உருவாக்க வாய்ப்புகளை பற்றிக் கொள்ளும் கொள்கை வகுப்பாளர்கள் சிரமமான கேள்விகளை கேட்கிறார்கள்.

- ⋆ வளர்ச்சியைச் சுற்றி தங்களது மேம்பாட்டு யுக்திகளை நாடுகள் கட்டமைக்க வேண்டுமா? அல்லது வேலை வாய்ப்புமீது குவிகவனம் செலுத்த வேண்டுமா?
- ⋆ தொழில் முனைவோர்களை குறிப்பாக வளர்முக நாடுகளில் பல சிறிய நிறுவனங்களில் வளர்த்தெடுக்க வேண்டுமா? அல்லது தொழில் முனைவோர் பிறப்பிலேயே உருவாகிறார்களா?
- ⋆ சமூக ஒத்திசைவிற்கு வேலை வாய்ப்பு பங்களிப்பு செய்யும் என்றாலும், வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கு ஆதரவு தர முயற்சிப்பது தவிர, அரசாங்கத்தால் செய்யக்கூடியது ஏதேனும் இருக்கிறதா?
- ⋆ வேலையாற்றும் திறனுக்கு கல்வி மற்றும் பயிற்சியில் மேலதிக முதலீடு என்பது ஒரு முன்நிபந்தனையா அல்லது வேலை மூலமே திறனை கட்டமைக்க முடியுமா?
- ⋆ முதலீட்டுச் சூழலை மேம்படுத்தும் முயற்சிகள், பகுதி மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றை இலக்காக கொள்ள வேண்டுமா? அல்லது வேலை வாய்ப்புகள் அளிக்க மேலதிக உள்ளாற்றல் உள்ள நிறுவனங்கள் வேண்டுமா?
- ⋆ ஒரு நாட்டில் வேலை உருவாக்கும் கொள்கைகள் இதர நாடுகளின் வேலை வாய்ப்பில் பாதிப்பு ஏற்படுத்தும் அபாயம் என்ன?
- ⋆ மிகப்பெரிய அதிர்ச்சி மற்றும் மாபெரும் சீரமைப்பை சந்திக்கும்போது, வேலை வாய்ப்பை பாதுகாப்பது நல்லதா? மக்களை பாதுகாப்பதா?
- ⋆ குறைவான உற்பத்தி திறனுள்ள பகுதி மற்றும் நடவடிக்கைகளிலிருந்து மேலதிக உள்ளாற்றல் உள்ள பகுதிக்கும், நடவடிக்கைககளுக்கும் தொழிலாளர்களை மாற்றுவதை எவ்வாறு விரைவுபடுத்த முடியும்?

சம்பாத்தியத்திற்காகவும், வேலை கொடுக்கும் பலன்களுக்காகவும் தனி மனிதர்கள் வேலையை மதிக்கிறார்கள். சுய மதிப்பு மற்றும் மகிழ்விற்கு அவை செலுத்தும் பங்களிப்பிற்காகவும் மதிக்கிறார்கள். ஆனால், சில வேலைகளுக்கு மேலதிக அகல தாக்கம் இருக்கிறது. குடும்பங்கள் பணத்தை செலவழிக்கும் வழியையும், பெண்களுக் கான வேலை வாய்ப்பு மாற்ற முடியும். குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்கு செய்யும் முதலீட்டை செய்ய முடியும். மாநகரங்களில் உள்ள வேலை வாய்ப்புகள் மேலதிக நிபுணத் துவத்தை அதிகரித்து, எண்ணங்களின் பரிவர்த்த னைக்கு வழிவகுக்கும். இதர பணிகளை மேலதிக பயனுள்ளதாக்கும். சர்வதேச சந்தை தொடர்பான வேலை வாய்ப்புகள் சொந்த நாட்டிற்கு புதிய தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை அறிவு ஆகியவற்றை கொண்டு வரும். கொந்தளிப்பான சூழ்நிலைகளில், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு வன்முறைக்கு மாற்றாக இருந்து சமாதானம் நிலவ உதவும்.

வாழ்க்கைத்தரம், உற்பத்தித் திறன், சமூக ஒத்திசைவு ஆகியவற்றின் மீதான மேலதிக செல்வாக்கின் மூலம் தனி மனிதர்களை சமூகத்தில் இந்த வேலை வாய்ப்புகளுக்கு இன்னும் மேலதிக மதிப்பு இருக்கிறது. ஆனால், சில வேலைகளுக்கு எதிர்மறை எச்ச சொச்சங்கள் இருக்க முடியும். மாறுதல் அல்லது சலுகைகள் மூலம் ஆதரவு அளிக்கப்படும் வேலைகள் மற்றவர்களுக்கு சுமையை பிரதிநிதித்துவப்படுகிறது அல்லது பலனளிக்கும் வேலையை பெறுவதற்கான அவர்களது வாய்ப்பை குறைக்கிறது. சுற்றுச்சூழலை சேதப்படுத்தும் வேலைகள் அனைவரையும் பாதிக்கின்றன. இவ்வாறு சில வேலைகள் வளர்ச்சிக்கு மேலதிகமாக உதவுகின்றன. அவை தனிமனிதருக்கு ஈர்ப்பாக இருந்தாலும், மற்றவை சிறிதளவே வளர்ச்சிக்கு உதவுகின்றன.

எந்த வேலை வளர்ச்சிக்கு ஆகச் சிறப்பாக உதவுகிறது என்பது சூழ்நிலைகளை சார்ந்தது. அதன் வளர்ச்சி, மக்கள் தொகை, வளம் மற்றும் நிறுவனங்களின் தன்மையில் நாடுகள் ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன. விவசாய வேலைகளை மேலதிக பயனுள்ளதாக ஆக்குவதிலும், பண்ணைக்கு வெளியே வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும், விவசாய சமூகங்களுக்கு சவால் இருக்கிறது. அரசாங்க ஆதரவு மூலம் என்பதைவிட, உலக சந்தையோடு தொடர்புடைய வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில், வளம் படைத்த பணக்கார நாடுகள் தங்கள் ஏற்றுமதியின் வகைகளை விரிவாக்க வேண்டிய தேவை இருக்கும். வேலை வாய்ப்பை பாதிக்காது, அவற்றின் எல்லையை விரிவாக்கும் வழிகளில் அவற்றின் சமூக பாதுகாப்பு முறையை வடிவமைப்பது மற்ற நாடுகளுக்கு அவசியமாக இருக்கும்.

பெரும்பான்மையான வேலை வாய்ப்புகள் தனியார் துறையால் உருவாக்கப்படுகிறது. இருந்தாலும், வேலை வாய்ப்பு உருவாக்கத்தில் அரசாங்கம் தனியார் துறைக்கு ஆதரவாகவோ, குந்தகமாகவோ இருக்க முடியும். வேலை வாய்ப்பு மூலம் வளர்ச்சி நிகழ்கிறது என்ற எண்ணம், அரசாங்கம் பின்பற்றக்கூடிய யுக்திகள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது புதிய வெளிச்சம் பாய்ச்சுகிறது. ஒரு நாட்டின் சூழ்நிலைகளில் எந்த வகையான வேலைகள் அதிகபட்ச வளர்ச்சிப் பலன்களை அளிக்கும் என்பதை யுக்திகள் அடையாளம் காண வேண்டும். தனியார் துறையின் வேலை உருவாக்கத்தை தடுக்கும் தடைகளை கொள்கைகள் நீக்க வேண்டும். வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களும் தேவைப்படும். உதாரணமாக மோதலால் பாதிக்கப்படும் நாடுகளில் அவ்வாறு தேவைப்படும். ஆனால், வேலைகளி லிருந்து வரக்கூடிய நேர்மறை மற்றும் எதிர்மறை மிச்ச சொச்சங்களின் உள்ளாற்றலை கணக்கில் கொண்டு, இந்த கொள்கைகளின் இலாப நட்ட கணக்கை மதிப்பிட வேண்டும்.

மேலதிக யதார்த்த மட்டத்தில், வளர்ச்சி மீது வேலையின் தாக்கம் குறித்த பார்வை மூன்று படிநிலை அணுகுமுறைகளுக்கு வழிவகுக்கிறது.

***அடிப்படை:*** நாடுகள் வளமடைய, வளமடைய மேலதிக வருவாய்க்கும், மேலதிக அகல சமூக பலன்களுக்கும் வேலை வாய்ப்பு வழிவகுப்பதால், வளர்ச்சிக்கு உகந்ததாய், கொள்கைச் சூழல் இருக்க வேண்டும். பரந்த பொருளாதார நிலைத்தன்மை, உதவிகரமான வர்த்தகச் சூழல், மானுட முதலீட்டு சேகரிப்பு, சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை கவனிப்பது இதற்கு அவசியம்.

***தொழிலாளர் கொள்கைகள்:*** வளர்ச்சி மட்டுமே போதுமானதாக இருக்காது என்பதால், வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கு உதவுவதாகவும், வேலை வாய்ப்பிலிருந்து வளர்ச்சிக்கான பலன்களை உயர்த்துவதாகவும் தொழிலாளர் கொள்கைகள் இருப்பது அவசியமாகும். பணித்திறனுக்கு பாதகமின்றி, தொழிலாளர் சந்தை திரிபுகளை கொள்கைகள் சரியாக்கலாம். ஆனால், மாநகரங்களில் வேலை வாய்ப்புத் ததடைகளை உருவாக்கும், உலக மதிப்பு சங்கிலியை பாதிக்கும் குறுக்கீடுகளை அவை தவிர்க்க வேண்டும். மிகவும் பலவீனமான வர்களுக்கு குரல் கொடுத்து, பாதுகாப்பு வழங்க வேண்டும்.

***முன்னுரிமைகள்:*** சில வேலைகள் மற்றவற்றை விட, வளர்ச்சிக்கு மேலதிகமாக உதவுவதால், ஒரு நாட்டின் சூழ்நிலையில், நாட்டிற்கு உச்சபட்ச வளர்ச்சிப் பலன் அளிக்கும் வேலை வகைகளை அடையாளம் காண்பது அவசியமாகும். சந்தை குறைபாடுகளை நீக்கவோ அல்லது ஈடு செய்யவோ வேண்டும். குறைந்த வேலை வாய்ப்பை விளைவிக்கும் நிறுவனரீதியிலான குறைபாடுகளை நீக்க வேண்டும்.

வளர்ச்சிக்கான வேலை வாய்ப்பின் முக்கியத் துவத்தை தொழிலாளர் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களின் முக்கியத்துவமாக அர்த்தப்படுத்தக் கூடாது. வளர்முக நாடுகளில் கிட்டத்தட்ட பாதி மக்கள் விவசாயிகளாவோ அல்லது சுயவேலை வாய்ப்பு கொண்டவர்களாகவோ இருக்கின்றனர். எனவே, அவர்கள் வேலை வாய்ப்பு சந்தைக்கு வெளியே இருக்கின்றனர். கூலி வேலை தொடர்பாககூட, தொழிலாளர் கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள், வேலை உருவாக்கத்திற்கு முக்கிய

தடையாக இருக்கலாம். பெரும்பாலும் ஆகப் பொருத்தமான தடை தொழிலாளர் சந்தைக்கு வெளியே இருக்கும். மாநகரங்கள் மேலதிக சிறப்பாக பணியாற்றவும், பொருத்தமான விவசாய தொழில் நுட்பம் விவசாயிகளுக்கு கிடைக்கவும், அவர்களை அவற்றை செயல்படுத்த வைக்கவும் அல்லது புதிய ஏற்றுமதிகளை வளர்க்க நிறுவனங்களை அனுமதிக்கவும் உதவும் கொள்கைகள் வேலை உருவாக்கத்திற்கான தூண்டுகோல்களாக இருக்கும். வளர்ச்சிக்கு வேலை வாய்ப்பு முக்கியம். வேலை வாய்ப்பிற்கு வளர்ச்சி கொள்கை தேவை.

**வேலை தேவை:** வேலை என்றால் முதலாளியை கொண்ட ஒரு தொழிலாளியும், முறையான ஊதியமும் பலருக்கு நினைவு வரும். இருந்தாலும், ஆக வறுமையான நாடுகளில், பெரும்பாலான தொழிலாளர்கள் முதலாளி - தொழிலாளி உறவு முறைக்கு வெளியே இருக்கின்றனர். உலகெங்கிலும் 300 கோடி மக்கள் வேலை செய்கின்றனர். அவர்களது வேலைகள் பெரிதும் வேறுபடுகின்றன. மற்றொரு 150 கோடி வயலிலும், சிறிய குடிசை நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர். அல்லது தினசரி அல்லது பருவ காலமோ பெறுகின்றனர்.

இதற்கிடையில் 20 கோடி மக்களில் பலர் பெரிதும் இளைஞர்கள். வேலையற்று இருக்கிறார் கள். பணியை தேடி நிற்கின்றனர். கிட்டத்தட்ட 200 கோடி வேலை செய்யக்கூடிய வயதுடைய பெரியவர்கள் - அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் - வேலையும் செய்யவில்லை, வேலையையும் தேடவில்லை. அதில் எண்ணிக்கை தெரியாத பலர் வேலை பெற விருப்பமாய் இருக்கின்றனர். இவ்வாறு வேலை என்பது என்ன என்பது பயனுள்ள தொடக்கப் புள்ளி.

வாழ்க்கைக்கு சம்பாதிக்க மக்கள் என்ன செய்கிறார்கள் என்பதை விவரிக்க பயன்படுத்தப் படும் சொற்களின் அர்த்தம் நாடுகளுக்கும், கலாச்சாரத்திற்கும் ஏற்ப மாறுபடுகிறது. அலுவல கங்கள் அல்லது தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களை சில வார்த்தைகள் குறிப்பிடு கின்றன. மற்றவை மேலதிக அகலமாக, விவசாயிகள், மாநகரங்களில் சுய வேலை வாய்ப்பு கொண்ட வர்த்தகர்கள் மற்றும் குழந்தைகளையும், முதியோர்களையும் கவனித்துக் கொள்வோர் போன்றவர்களை உள்ளடக்கியது. வேறுபாடு அர்த்தம் தொடர்பானது மட்டுமல்ல, மக்கள் மதிக்கும் வேலையின் வேறுபட்ட அம்சங்களை வேறுபட்ட அர்த்தங்கள் சுட்டிக்காட்டுகின்றன. வேலைக்கான கொள்கைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதன் மீதான தாக்கத்தை வேலை என்ன என்பதன் கருத்து ஏற்படுத்துகிறது.

புள்ளியியலாளர்களை பொறுத்தவரை, வேலை என்பது ஒரு முதலாளியிடம் பணியாற்றுவது அல்லது சுயவேலை உள்பட, ஒரு மனிதரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவுள்ள குறிப்பிட்ட பணிகள் மற்றும் கடமைகள். பணியில் அமர்த்தப்பட்டவரால் வேலை செய்யப்பட்டது. சந்தைக்காகவோ, சொந்த உபயோகத்திற்காகவோ பொருட்கள் அல்லது சேவையை உற்பத்தி செய்பவர்கள் என்று இது விவரிக்கப்படும். ஆனால், எதனை வேலையாக கருதக்கூடாது என்பதற்கு புள்ளியியல் மௌனமாக இருக்கிறது. ஏற்க முடியாதவர்களின் எல்லை என்று அடிப்படை மனித உரிமையை சர்வதேச வரையறைகள் கருதுகின்றன. அவற்றில் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் மீதான உலக பிரகடனம் (1948) மற்றும் வேலையின் அடிப்படை கொள்கைகள் மற்றும் உரிமைகள் மீதான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனம் (1998) (இது முக்கிய தொழிலாளர் தரங்களை மேலும் குறிப்பிடுகிறது). இந்த வேறுபட்ட கருத்துக்களை இணைத்துப் பார்த்தால், ஏற்க முடியாதவைகளின் எல்லை என்ற மனித உரிமைகளை மீறாமல், பணமாகவோ அல்லது பொருளாகவோ வருவாயை ஈட்டும் நடவடிக்கைகளே வேலை.

## வேறுபட்ட இடங்கள் வேறுபட்ட வேலைகள்

வேலையில் உலகம் வளர்முக நாடுகளில் குறிப்பாக பலதரப்பட்டவை. தொழில் வளர்ச்சி நாடுகளின் வழக்கமான அளவுகோல் போல் இந்த பலதரப்பட்டவை என்பது வேலை செய்யும் நேரத்தையும், வேலையின் எண்ணிக்கையையும் மட்டும் குறிப்பிடவில்லை. வேலையின் குணாம்சத்தையும் குறிப்பிடுகிறது. இரண்டு முக்கிய அம்சங்கள் தெளிவாகத் தெரிகின்றன. சுயவேலை வாய்ப்பும், விவசாயமும் இருப்பது ஒன்று. உயிர் பிழைத்தலுக்கான விவசாயம், குறைந்த திறன் தேவைப்படும் வேலை முதல், தொழில்நுட்பத் திறன் கோரும் உற்பத்தி மற்றும் சேவைகள் மற்றும் திறன் சார்ந்த அறிவு வேலை வரை, மரபுவழியான மற்றும் நவீன உற்பத்தி முறை நிலவுவது மற்றொன்று.

நிறுவனப் பதிவு இல்லாமை, சமூக பாதுகாப்பு இல்லாமை ஆகியவற்றாலோ அல்லது வேலை ஒப்பந்தம் இல்லாமையாலோ விவரிக்கப்பட்டிருந் தாலும், வளர்முக நாடுகளில் வேலையில் முறைசாரா தன்மை அதிகம் நிலவுகிறது. முறைசாரா வேலை வாய்ப்பு தொழிலாளர் சட்டங்களின்கீழ் வருவ தில்லை. அதன் வரையறுக்கப்பட்ட வாய்ப்பெல்லை காரணமாகவோ அல்லது வேண்டுமென்றே தவிர்த்தல் காரணமாகவோ அவ்வாறு வருவதில்லை. குறிப்பான வரையறை எப்படி இருந்தாலும்,

முறைசாரா வேலை வாய்ப்பு என்பது பொதுவாக குறைவான உற்பத்தித் திறனோடு தொடர்புபடுத்தப் படுகிறது. ஆயினும், முறைசார் வேலையில் மேலதிக திறன் விளைவும் என்று இந்த கருத்துகளுக்கு அர்த்தம் இல்லை. முறைசார் வேலை என்பது வேலையின்மை, குறைவான உற்பத்தித் திறனின் அறிகுறியாகவும், அதே நேரத்தில் உற்பத்தித் திறனின் குறைவின் காரணமாகவும் இருக்கிறது.

பால் மற்றும் வயது வேறுபாடுகள் தெளிவாகத் தெரிவதாக இருக்கின்றன. உலகெங்கிலும் பெண்களில் பாதி பேருக்கு கீழானவர்களுக்கே வேலை இருக்கிறது. ஆண்களில் கிட்டத்தட்ட ஐந்தில் நான்கு பேருக்கு வேலை இரக்கிறது. பாகிஸ்தானில் 28 சதவீத பெண்களுக்கும், 82 சதவீத ஆண்களுக்கும் வேலை இருக்கிறது. டான்சானியாவில் மற்றும் வியட்னாமில் பெண்களிலும், ஆண்களிலும் 75 சதவீதத்திற்கு மேல் வேலையில் இருக்கின்றனர். வேலை வாய்ப்பில் இந்த தெளிவாய் தெரியும் வேறுபாட்டோடு, ஆண்களைவிட பெண்கள் கணிசமான அளவிற்கு குறைவாக வருவாய் பெறுகின்றனர். கல்வி, அனுபவம் அல்லது துறையால் இந்த வேறுபாடு விளக்கப்படவில்லை. 15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடையே உள்ள இளைஞர்களின் பங்கு அதிகரித்து வரும்போது, கற்பதற்கும், பயிற்சிக்கும் தங்களது நேரத்தை அவர்கள் ஒதுக்குகின்றனர். சில நாடுகளில் இளைஞர்களின் வேலையின்மை இன்னும் அபாயகரமாக உள்ளது. (2008 தொடக்கம் முதல் தென் ஆப்ரிக்காவில் 40 சதவீதத்திற்கு மேல், 2008 தொடக்கம் முதல் ஸ்பெயினில் 50 சதவீதத்திற்கும் மேல்) அது குறைவாக உள்ள நாடுகளில்கூட சராசரியைவிட அல்லது அதற்கு மேலாக இளைஞர்களின் வேலையின்மை நிலவுகிறது. இதோடு 62.1 கோடி இளைஞர்கள் சும்மா இருக்கிறார்கள். பணியிலோ பயிற்சியிலோ அல்ல. வேலையின்றி இருக்கிறார்கள். வேலை வாய்ப்பை தேடாமல் உள்ளனர். 15-24 வயதுடைய இளைஞர்களில் வேலையின்றி இருப்பவர்களின் சதவீதம் 10 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையே நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. வருவாய் இல்லாத வேலைகளில் பல இளைஞர்கள் பணியாற்றுகிறார்கள். அப்படியே ஊதியம் வழங்கப்பட்டாலும் சமூக பாதுகாப்பு இருப்பதன் சாத்தியம் குறைவு.

வேலை வாய்ப்பு தளத்தில் மேலும் பல பிரச்னைகளை சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பு விவரிக்கிறது. ஆனால், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆவணத்தின் முக்கிய திசைவழி என்பது, மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பது எப்படி என்பதே. ❖

## யாருக்கு தெரியப்போகிறது?

யாருக்கு தெரியப்போகிறது?
எருமையும் நானும்
குளித்தெழுந்த குளங்கள்....
மாடுகளின் குளம்படி....
வண்டித்தடங்கள்....

யாருக்குத் தெரியப்போகிறது?
பசியெடுத்தால் பறந்து வந்து
கொத்தித்தின்ன காத்து நின்ற
தானியங்கள்....
என்னுலகம் இதுவென்று
எழுந்து நின்ற வீரமரங்கள்....
பஞ்சம்பசியை தூக்கி வீசும்
கழனி வாசம்....

எல்லாம் சிதைத்து புதைத்து
எட்டியவரை
எதையும் வாரிக் கொண்டு....

அழகான தார் சாலையில்
சுகமாய் பயணிக்கிறது
அசுரக் குழந்தையென்று....
யாருக்குத் தெரியப்போகிறது....?

- ஆர்.நடராஜன்



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவை ஜூன் 22 அன்று கோவையில் நடைபெற்றபோது “நினைவில் நீங்கா நாட்கள்” என்ற பெரணமல்லூர் சேகரனின் கட்டுரை நூலினை முன்னாள் பொதுச் செயலாளர் ச.ராமமூர்த்தி வெளியிட முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் ஆர்.கருணாகரன் பெற்றுக் கொண்டார்.

# வாட்ஸ்ஆப் குழுக்களும் வழிகாட்டும் நெறிமுறைகளும்

## உள்ளங்கையிலிருந்து சுண்டுவிரல் நுனிக்கு உந்தப்பட்டுள்ள உலகம்

கணினி வந்த பிறகு இண்டர்நெட் பரவலான போது உள்ளங்கையில் உலகம் வந்துவிட்டதாக வசதியானவர்கள் கூறக் கேட்டோம். அப்போது நம்மில் பலபேருக்கு கம்ப்யூட்டர் பற்றிய அறிவெல்லாம் கொஞ்சம்கூட இருந்திருக்கவில்லை. நம்மில் பெரும்பாலானவர்கள் கம்யூட்டர் சாதனத்தை பார்த்ததே நம்முடைய அலுவலகத்திலாகத்தான் இருக்கும். அதன்பிறகு நம்முடைய பிள்ளைகள் அவர்கள் கல்லூரி படிப்பு தேவைகளுக்காக கேட்டபோது நாம் நம் வீட்டிற்குள் கம்ப்யூட்டரை வாங்கிவைக்க நேர்ந்தது. 16 வயதினிலே மயிலையும், கிழக்கே போகும் ரயிலையும் பார்த்து ரசித்திருந்த நமக்கு, இ-மெயிலில் ஸ்டாம்ப் ஒட்டமாலே கடிதம் அனுப்பி அது அடுத்த நொடியில் டெலிவரி ஆகிவிடும் நிகழ்வு அதிசயமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவற்றுடன் உடனடியாக ஒத்துப்போக முடியாமல் தலைமுறை இடைவெளியும், தயக்கமும் நம்மை தள்ளி நிற்க வைத்தன. கைபேசி வந்தபின் அதில் இண்டர்நெட் இணைந்தபின் டிவிட்டர், ஸ்கைப், பேஸ்புக் என எவ்வளவோ செயலிகள் ஏற்பட்ட பிறகும் அவற்றுடன் ஒட்டி உறவாடிட தயக்கம் காட்டிய நம்முடைய பெரும்பான்மை, வாட்ஸ்ஆப் செயலியை மட்டும் வசப்படுத்திக் கொண்டது. இ-மெயிலில், முகநூலில், டிவிட்டரில் கடிதப் போக்குவரத்தும் கட்டுரை விவாதங்களும் நடந்தாலும் அவையெல்லாம் கூட நம்மில் பலபேருக்கு அந்நியப்பட்டுத்தான் கிடந்தன. ஆனால் கைபேசியில் வாட்ஸ்ஆப் என்ற ஒன்று வந்தபின் கிழவர்களும் கூட கைத்தடியை போட்டுவிட்டு கைபேசியை பிடித்துக் கொண்டார்கள். முகநூல், டிவிட்டர், இ-மெயில் என்று எத்தனையோ தகவல் பரிமாற்ற செயலிகள் வந்தாலும் கார்ப்பரேட் கம்பெனி காரிகை முதல் கழனியில் கதிரறுக்கும் கந்தசாமிவரை எல்லோரும் பயன்படுத்தக்கூடிய எளிய செயலியாக இன்று வாட்ஸ்ஆப் நிற்கிறது. இதன்மூலம் உள்ளங்கையில் இருந்த உலகம் இப்போது சுண்டுவிரல் நுனிக்கு உந்தப்பட்டு விட்டது.

## அபத்தங்களும் அதிசயங்களும்

உசேன் போல்ட்டின் ஓட்டத்தின் வேகத்தினைக்கூட உதவாக்கரை ஆக்கிவிடக்கூடியவை வாட்ஸ்ஆப் மூலமாக நொடிக்கும் குறைவான தருணத்தில் நிகழ்த்தப்படும் தகவல் பரிமாற்றங்கள். ஒரு வாட்ஸ்ஆப் செய்தி வந்தால் சட்டென்று அதை பார்வார்டு செய்வதில் பலருக்கும் ஒரு அலாதி சுகம். நான்தான் முதலில் பார்வேர்ட் செய்தேன் என்ற பெருமிதத்தை அடைவதற்கான அவசரத்தின் வெளிப்பாடு, வந்த செய்தி உண்மையா பொய்யா என்பதை சிந்தித்து உணர்ந்து பிறருக்கு அனுப்பும் பகுத்தறிவை மழுங்கடித்து வருகிறது. காஞ்சிபுரத்தில் ஒரு பள்ளிப் பேருந்து விபத்தில் சிக்கி 36 குழந்தைகள் உயிருக்கு ஆபத்தாக உள்ள தகவலில் தொடங்கி, இந்த படத்தை அல்லது செய்தியை உடனடியாக 15 பேருக்கு பார்வார்டு செய்தால் அதிர்ஷ்டம் வீடு தேடிவரும் என்ற மூடநம்பிக்கை பிரச்சாரத்தை தொடர்ந்து, திருச்சி இரயில் நிலையத்தில் ஒரு குழந்தை, பெற்றோரை விட்டுவிட்டு நிற்கும் புகைப்படத்தைப் போட்டு இதை அனைவருக்கும் பார்வார்டு செய்யுங்கள் என கடந்த மூன்றாண்டுகளாக வலம் வரும் செய்திகள் வரை இதில் அடக்கம். இதுபோக படிப்பவரின் சுயமரியாதையை கேள்வி கேட்கும் 'நீ சுத்த தமிழனாக இருந்தால் உடனே இதை அனைவருக்கும் அனுப்ப வேண்டும்.' இந்த செய்தியை படித்த பின்னும் சும்மா இருப்பவர்கள் சுத்த தமிழர்களாக இருக்க மாட்டார்கள்.' என்ற சாபங்கள் வரை அபத்தங்களுக்கும் பஞ்சமில்லை இந்த வாட்ஸ்ஆப்பில். ஆனாலும் இத்தனை அபத்தங்களுக்கு மேலாக அதிசயங்கள் நிறைந்திருக்கும் இடமாகவும் வாட்ஸ்ஆப் வலம்வருகிறது என்பதையும் மறுக்க முடியாது.

## வரங்களை சாபங்களாக்க வேண்டாம்

வாட்ஸ்ஆப்பில் குறிப்பிட்ட நோக்கம் கொண்டவர்கள் குழுக்களாக தனித்தனி குழு அமைத்துக்கொண்டு தங்களுக்குள் தகவல் பரிமாற்றம் நிகழ்த்திக்கொள்ளும் வசதியானது இக்காலச் சூழ்நிலையில், கேட்காமலேயே கிடைத்த வரமாகும். அத்தகைய வரம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் அனைவரையும் ஒன்றிணைத்து தகவல் பரிமாற்றம் நிகழ்த்திக் கொண்டிருக்கும் நமது மாநில நிருவாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்/செயலாளர்கள் கொண்ட குழுவிற்கும் வாய்க்கப் பெற்றுள்ளதை நாம் வரங்களாகவே பார்க்க வேண்டும். நமக்குள் நாம் சண்டையிட்டுக்கொண்டு வரங்களை சாபங்களாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

## விரும்பத்தகாத பதிவுகளும் வேண்டாத எதிர்வினைகளும்

நமது வாட்ஸ்ஆப் குரூப்பை நாம் நம்முடைய சங்க வளர்ச்சிக்காகவும், நாம் அனைவரும் ஒரே மன ஓட்டத்தில் இருக்க வேண்டும் என்பதற்கான கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் பயன்படுத்துவதே நமது தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். சில சமயங்களில் நமது தோழர்கள் சிலர் ஆர்வ மிகுதியாலோ அல்லது சரியான புரிதல் இன்றியோ அல்லது உண்மைத் தன்மையை முழுவதும் உணராமலேயோ சில கருத்துக்களை பதிவிடுவதும், அதற்கு சம்பந்தப்பட்ட தோழர்கள் எதிர்வினையாற்றுவதும், ஒருவரை மாற்றி மற்றொருவர் விமர்சித்துக் கொள்வதும், வார்த்தைகள் தடித்து விரும்பத் தகாத நிகழ்வுகள் ஏற்படுவதும் நடந்தேறி வருகின்றன. தொழிற்சங்க பயிற்சி பெற்ற, அரசு அலுவலகங்களில் பணிபுரியும், படித்தவர்களாகிய நமக்குள்ளேயே வாட்ஸ்ஆப் குரூப்பை

ஆக்கபூர்வமான காரியங்களுக்காக பயன்படுத்த முடியாமல் போகுமானால் அது நம் முன்னேற்றத்திற்கு நாமே போட்டுக்கொள்ளும் முட்டுக்கட்டையாகும். தொழிற்சங்க பயிற்சி வகுப்புகள் நடத்துவது போல் வாட்ஸ்ஆப் குரூப்பில் எதை பதிவிட வேண்டும் எதை பதிவிடக்கூடாது என்பதற்கும் ஒரு பயிற்சி வகுப்பு நடத்துவது அத்தியாவசியமாகுமானால் நாம் ஆயிரக்கணக்கான ஊழியர்களை வழிநடத்துவதற்காக ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்பிற்கு அது உகந்ததாக இருக்குமா? என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறோம். வாட்ஸ்ஆப் குரூப்பில் சமீபகாலமாக பதிவிடப்படும் சில பதிவுகளும் அதனால் ஏற்படும் எதிர்வினைகளும் தங்களது உயிரையே துச்சமாக நினைத்து சங்கத்தை நேசித்து அதைக் கட்டிக்காத்து நம் கைகளில் அதை கொடுத்துவிட்டு சென்றிருக்கும் நம் முன்னோடித் தோழர்கள் கண்ட இப்பெரிய இயக்கத்தையே துண்டு துண்டாக சிதைத்து அமைப்பையே குலைத்துவிடும் அபாயகரத்தை ஏற்படுத்துவதாக உள்ளதை இத்தருணத்தில் பதிவிட வேண்டியிருக்கிறது. இதுகுறித்த புரிதலையும், புரிந்துணர்வையும் நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இந்த வாட்ஸ்ஆப் குழுமத்தை ஆரோக்கியமான மையமாக நிலைநிறுத்தி வைக்கலாம்.

## தவிர்க்க வேண்டியதும், துளிர்க்க வேண்டியதும்

இயக்கம் என்பது தனிநபரை விட உயர்வானது. நிர்வாககிகளாகிய நம் ஒவ்வொருவருடைய தனி ஒழுக்கம் தான் இயக்கத்தை கம்பீரமாக நிறுத்தி வைக்கும் என்பதை நாம் எப்போதும் மறந்து விடக்கூடாது. இப்பெரிய இயக்கத்தில் எந்த தனிப்பட்ட மனிதருக்கும் முக்கியத்துவமோ, தனிமனித துதியோ எப்போதும் இருந்தது கிடையாது. இந்த இயக்கத்தில் நாம் ஒவ்வொருவரும் பெற்றிருக்கக்கூடிய பொறுப்பு என்பது அவரவர் உழைப்பு, திறமை மற்றும் இயக்க நடவடிக்கைகளைக் கொண்டு பெறப்பட்டிருப்பதாகும். நிர்வாகிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். ஆனால் நான் பெரியவனா? நீ பெரியவனா? நான் புத்திசாலியா அல்லது அவன் புத்திசாலியா? அவர் செய்தது சரியா? இவர் செய்தது முறையா? என்ற விவாதங்கள் வாட்ஸ்ஆப் குரூப்பில் பதிவிடுவது இயக்க நடவடிக்கைகளை புதைகுழிக்குள் தள்ளிவிடும். சில தோழர்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள இந்த குரூப்பை பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பதும், தங்களுக்கு பிடிக்காதவர்களின் மீது குறைகளையும் குற்றங்களையும் அடுக்கி ஒற்றுமையாக கொண்டு செல்லவேண்டிய இயக்கத்துக்குள் கருத்து வேறுபாடுகளை விதைப்பதும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதும் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். தனிப்பட்ட நிகழ்வுகளை பிரச்னைகளை பொதுத்தளத்தில் பதிவிட்டு தேவையற்ற குழப்ப நிலையை உருவாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட நபருடைய சாதனைகளை குரூப்பில் பதிவிட்டு என்னைப்போல் யார் இருக்க முடியும் என்ற புளகாங்கிதங்களை தேட நினைப்பவர்களை மற்ற தோழர்கள் நிர்வாகிகள் சுலபமாக அடையாளம் கண்டுவிடுவார்கள் என்பதையும் தொடர்ந்து அந்த முயற்சியில் ஈடுபட்டால் சில தோழர்கள் அதற்கு எதிர்வினையாற்றுவதன் மூலம் தேவையற்ற பிரச்னைகள் குரூப்பிற்குள்ளாகவே ஏற்பட்டு பல தோழர்களுக்கு அதனால் மன இறுக்கங்கள் தோன்றுவதையும் அப்படி பதிவிடுபவர்கள் உணர வேண்டும்.

நிர்வாகிகளுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ள குழுமத்தில் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான கருத்துக்களையும், நிகழ்வுகளையும் மட்டுமே பதிவிட வேண்டும். பாராட்டுபவர்களை மனந்திறந்து பாராட்டலாம் தவறில்லை. ஆனால் குற்றம் கூறுவதற்கு இந்த குழுமத்தை தயவு செய்து பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகிகளின் குறைபாடுகளை ஸ்தாபன கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்குழு கூட்டங்களிலோ அல்லது மாநில நிர்வாகிகள் மட்டத்திலோ பேசி உரிய தீர்வை எட்ட வேண்டும். தகவல் பரிமாற்றத்திற்கு தக்கதொரு சாதனமாக அமைந்துள்ள வாட்ஸ்ஆப் குழுமத்தை நம்முடைய கொள்கைகளை நிறைவேற்ற கோரிக்கைகளை வென்றுகாட்ட ஒற்றுமையை வலிவூட்ட பயன்படுத்துவதன் மூலம் எதிர்வரும் எவ்வளவு பெரிய தடைகளையும் தகர்த்தெறியலாம். நமக்குள்ளான கருத்துவேறுபாடுகளை சரி செய்து கொள்வதற்கு தனிப்பட்ட முயற்சிகளை செய்வதே இயக்கத்தை மேலும் மேலும் துடிப்புள்ளதாக வைக்கும். தவறு செய்த தோழர் திருந்துவதற்கும் துடிப்புடன் செயல்படுவதற்கும் இத்தகைய நடிவடிக்கைகள் உதவும். நம்முடைய நடவடிக்கைகள் தவறு செய்யும் தோழர்கள் திருந்துவதற்காக இருக்க வேண்டுமேயொழிய அவர்களை தண்டிப்பதாக இருக்கக்கூடாது.

## வகுத்தெடுக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்

உண்மைத் தகவல்களைப் பெறுவதற்கு எல்லையற்ற வழிமுறைகள் இருக்கும் ஒரு யுகத்திலும் கூட கோட்பாடுகள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதற்கும், திரித்து கூறப்படுவதற்கும் எந்தவித வரம்புகளும் இல்லாமலிருப்பது வரலாற்றின் விசித்திரமான வேடிக்கைகளில் ஒன்றுதான் என்றாலும் அதை சரி செய்ய வேண்டிய தலையாயக் கடமை நமக்கு உள்ளது. அதேபோல் நமது கால்களுக்கு கீழேயுள்ள புவியின் மையத்தில் நடந்து கொண்டிருப்பதை கண்டுகொள்ளாமல் இருந்துகொண்டு, புவியிலிருந்து பலகோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள விண்மீன்களின் மையத்தில் நடப்பதை ஆராய்ச்சி செய்வதில் அர்த்தமில்லை. ஏற்கெனவே நமக்கு எதிராக அதிகார வர்க்கமும், ஊடகங்களும், நம் செயல்களை குறைசொல்லும் சில நம்பிக்கை துரோகிகளும் உள்ள நிலையில் அவர்களின் வாய்க்கு அவல்களை வாரி வழங்கும் செயல்களில் நாம் ஈடுபடக்கூடாது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் சுண்டுவிரல் நுனிக்கு உந்தப்பட்டுள்ள இந்த உலகத்தை நாம் சரியானபடி பாதுகாக்காவிட்டால் அது நம்மை தூக்கி எறிந்துவிடும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே பாதுகாப்பிற்கான ஆயுதத்தை, அதாவது நமது இயக்க முன்னணி தோழர்கள் வாட்ஸ்ஆப் குழுமத்தில் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிப்போம். ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

சங்கத்தின் நாகை மாவட்ட மாநாடு நாகை அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மாவட்டத் தலைவர் எஸ்.கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. நாகை ஒன்றியத் தலைவர் கே.ராஜி வரவேற்புரையாற்றினார். இந்திய தொழிற்சங்க மைய மாவட்டச் செயலாளர் சீனி.மணி துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் என்.புகழேந்தி வேலை அறிக்கையையும் பொருளாளர் எஸ்.சாந்தி நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார். மாவட்ட நிர்வாகிகள் வி.தேன்மொழி, எம.ஜி.ராமமூர்த்தி, சி.வாசுகி, வி.சித்ரா, எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.கார்த்திகா ஆகியோர் தீர்மணங்களை முன்மொழிந்தனர்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்கண்டோர் தேர்வுசெய்யப்பட்டனர். தலைவராக வி.தேன்மொழி துணைத் தலைவர்களாக எஸ்.கலைச்செல்வன், என்.புகழேந்தி, என்.வளர்மதி, பி.அருண்மொழி, செயலாளராக கே.ராஜு இணைச் செயலாளர்களாக எம்.இராஜேந்திரன், சித்ரா, எஸ்.கிருஷ்ணமூர்த்தி, கே.பாலாம்பாள் பொருளாளராக கே.துர்க்காம்பிகா மாநில செயற்குழு உறுப்பிராக சி.வாசுகி தணிக்கையாளர்களாக பி.சாந்தி, வி.எஸ்.இராமமூர்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், சத்துணவு ஊழியர் சங்க தஞ்சை மாவட்டச் செயலாளர் டி.ரவிச்சந்திரன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் ஆர்.ராஜசேகர், கடலூர் மாவட்ட நிர்வாகி சி.மச்சேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில துணைத் தலைவர் ஏ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். மாநில பொதுச்செயலாளர் எஸ்.முருகேசன் தனது நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் எஸ்.சாந்தி நன்றி கூறினார்.

## சாலைப் பணியாளர்கள் சங்கம்

தமிழ்நாடு நெடுஞ்சாலை பணியாளர்கள் சங்கத்தின் வட்டக் கிளையின் சார்பில் திருச்செங்கோடு உதவிக் கோட்ட பொறியாளர் அலுவலகம் முன்பு திருச்சி எஸ்.இ. மற்றும் புதுக்கோட்டை டி.இ. ஆகியோரை கண்டித்து வட்டத் தலைவர் கே.பாஸ்கர் தலைமையில் கண்டன நடைபெற்றது. கடந்த மாதம் 9ஆம் தேதி தமிழகம் முழுவதும் கோட்டப் பொறியாளர் அலுவகம் முன்பு வாயில் கருப்புத் துணி கட்டியும், ஒப்பாரி வைத்தும்




போராட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட சாலைப் பணியாளர்களின் 3 நாட்கள் ஊதியத்தை திருச்சி எஸ்.இ. மற்றும் புதுக்கோட்டை டி.இ. பிடித்தம் செய்ததை கண்டித்தும், இந்த இரண்டு மாவட்ட சாலைப் பணியாளர்களை பணி மாறுதல் உத்தரவை ரத்து செய்ய கோரியும் திருச்செங்கோடு உதவிக்கோட்ட பொறியாளர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட பொருளாளர் வி.விவேகானந்தன் முன்னிலை வகித்தார். வட்ட செயலாளர் எம்.சௌந்தரராஜன் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார். தொடர்ந்து மாவட்டச் செயலர் எம்.பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக வட்ட பொருளாளர் ஆர்.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம்

சார்பில் 14.06.2018 அன்று, நமது 20 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற வெளிநடப்பு ஆர்ப்பாட்டம் சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து வட்டக் கிளைகளிலும், மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் மாநிலச்



செயலாளர் தோழர். கண்ணன், மாவட்டத் தலைவர் மாணிக்கவாசகம், மாவட்டச் செயலாளர் தமிழரசன்,



மாவட்டப் பொருளாளர் நாகநாதன் உள்ளிட்ட நிர்வாகிகள் தலைமையில், காளையார்கோவில் மற்றும் தேவகோட்டையில் நடைபெற்ற வெளிநடப்பு ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம்

சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட பேரவை சனிக்கிழமை அன்று நடைபெற்றது. இதற்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் அ.சந்தானம் தலைமை தாங்கினார். மாவட்ட துணை தலைவர் கே.மீராக்கண்ணன் வரவேற்றார். சங்கத்தின் மாநில தணிக்கையாளர் எஸ்.காந்திமதிநாதன் துவக்க உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஜி.மெல்கி ராஜாசிங் வேலை அறிக்கையை வாசித்தார். மாவட்ட




பொருளாளர் எம்.மகேந்திரன் வரவு செலவு கணக்கை முன் வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் ஏ.சுந்தரவல்லி 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற ஊரக வளர்ச்சி ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஏ.மணிகண்டன், பொதுப்பணித்துறை ஊழியர் சங்க தலைவர் ஆர்.பாண்டுரங்கன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன் நிறைவுரையாற்றினார். மாவட்ட துணை தலைவர் வி.வீரமணி நன்றி கூறினார்.

மாவட்ட துணை தலைவராக மகேஷ்,மாவட்ட இணை செயலாளராக சோமசுந்தரம் ஆகியோர் புதிதாக தேர்வு செய்தனர்.

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம்

திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளுக்காக சங்கம் அமைத்த காரணத்திற்காக பணிநீக்கம் செய்யப்பட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் வழிகாட்டுதலோடு, எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அனைத்து ஊழியர்கள் சங்கத்தின் தொடர் முயற்சி மற்றும் தோழர் வேல்முருகன் வழக்கறிஞர், தமிழ்நாடு காசநோய் பணியாளர்கள் சங்கம், 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் சங்கம், passitive network தலைவர் கௌசல்யா உள்ளிட்ட தோழமை சங்கங்களின் ஆதரவோடு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே.வாசன், காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் விஜயதாரிணி ஆகியோரின் முயற்சியாலும், சுகாதாரத் துறை முதன்மை செயலாளர், மதிப்பிற்குரிய திட்ட இயக்குனர் TANSACS, அவர்களின் வரலாற்று சிறப்பு வாய்ந்த, மனித நேயம்மிக்க நிர்வாகத் திறனால் மீண்டும் பணியில் இணைந்தவர்கள் தற்போதைய விபரங்களை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். அவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

1) மா.சேரலாதன் 2) சக்திவடிவேல் 3) மீனாகுமாரி 4) மனோகரன் 5) வேலையா 6) அறிவழகன் 7) முருகானந்தம் 8) அருள்குமார் 9) விஜியகுமார் 10) ராஜாமணிகண்டன் 11) போரூரான், 12) சிரிரங்கன் 13) லலிதா 14) மகேஸ் 15) ரவி 16) சாந்தி 17) சரஸ்வதி 18) வெங்கடேசன் 19) சிவக்குமார் 20) தேவராஜ். ❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com